லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-8 இதழ்-1 ஜூன் - 2019 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



# தலை நிமிர்ந்த அதிமுக





# வள்ளலார் அருளிய
# கல்ப மருந்து

பத்தியமில்லா மருந்து

## குணமாகும் நோய்கள்






- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்

- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்
- சளி ▪ இருமல் ▪ கப ரோகங்கள்
- கபம் ▪ காசம் ▪ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ▪ பித்தம்





போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்

நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்



சித்த மருத்துவர் **K. இராஜமாணிக்கம்**

**அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்**

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

# நியாயமாக நடந்ததா தேர்தல்?

மக்களவை தேர்தல் முடிவுகள் வெளிவந்து விட்டன. மிகப் பிரமாண்ட வெற்றியுடன் மீண்டும் ஆட்சியை தக்க வைத்துக்கொண்டார் பிரதமர் மோடி. முன்னாள் பிரதமர்கள் நேரு, இந்திராவுக்கு பிறகு தனிப்பெரும்பான்மையுடன் இரண்டாம் முறையாக மீண்டும் ஆட்சியில் அமரும் பிரதமர் என்ற பெருமையும் மோடிக்கு கிடைத்து இருக்கிறது.

இந்த வெற்றி நிச்சயம் எளிதில் வந்ததில்லை. காங்கிரஸ் உள்ளிட்ட 22 எதிர்கட்சிகளின் கடும் எதிர்ப்பை, அவர்களின் பிரசாரத்தை கடந்து வந்திருக்கிறது. இதற்கு மோடி, பா.ஜ தலைவர் அமித்ஷாவின் கடின உழைப்பை பாராட்டத்தான் வேண்டும். குறிப்பாக கடந்த ஆண்டு இறுதியில் நடந்த மத்தியபிரதேசம், ராஜஸ்தான், சட்டீஸ்கர் சட்டப் பேரவை தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்த காங்கிரஸ் இந்த மக்களவை தேர்தலில் அங்குள்ள அனைத்து தொகுதிகளிலும் கிட்டத் தட்ட துடைத்து எறியப்பட்டு இருக்கிறது.

அதே போல் பீகார், மகாராஷ்டிரா, டெல்லி, கர்நாடகா, அசாம், குஜராத்திலும் பா.ஜவுக்கு வெற்றி கிடைத்திருப்பதை மறுக்க முடியாது. இதற்கு மோடி, அமித்ஷாவழிகாட்டுதல்படி வீடுவீடாகவாக்காளர்களை சந்தித்து வெற்றியை தேடித்தந்த பா.ஜ தொண்டர்களும் ஒரு காரணம். அதே சமயம் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் கடும் போராட்டத்தையும் ஒதுக்க முடியாது. தனி ஒரு நபராக அத்தனை மாநிலங் களிலும் காங்கிரஸ் பிரசாரத்தை தன் தோளில் சுமந்து முன்னெடுத்துச்சென்றார். அது வெற்றி பெறவில்லை என்றாலும் நிச்சயம் காங்கிரஸ் கட்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல இந்த அனுபவம் உதவும். அதே சமயம் கர்நாடகா தவிர தென்மாநிலங்கள் மீண்டும் ஒருமுறை பா.ஜனதாவை புறக்கணித்து இருப்பதை கவனிக்க வேண்டும். தென்மாநில மக்களின் நம்பிக்கையை பெறுவதில் இந்த 5 ஆண்டுகள் மோடி மற்றும் அமித்ஷா கூட்டணி அதிக கவனம் செலுத்துவார்கள் என்று நம்பலாம். ஆந்திராவில் ஜெகன்மோகன்ரெட்டி அலை வீசியிருக்கிறது. தந்தை ராஜசேகரரெட்டியை போல் மகன் ஜெகனும் தெலுங்குதேசம் தலைவர் சந்திரபாபுநாயுடுவை வீழ்த்தியிருக்கிறார்.

தமிழகம் இந்த தேர்தலில் குறிப்பிடத்தக்க அசைவை நிகழ்த்தி காட்டியிருக்கிறது. கலைஞர், ஜெயலலிதா மறைவிற்கு பின் ஒட்டுமொத்த தமிழகமும் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினின் உழைப்பை, தலைமையை ஏற்றுக்கொண்டுள்ளது. அவரது கடின முயற்சியால் திமுக கூட்டணி தமிழகம், புதுவையில் தேர்தல் நடந்த 39 தொகுதி களில் 38 தொகுதிகளில் பிரமாண்ட வெற்றியை பெற்று இருக்கிறது. மத்தியில் மோடியைப் போல், தமிழகத்தில் தனிப்பெரும் தலைவராக மு.க.ஸ்டாலின் உருவாகி இருப்பதை இந்த தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டியிருக்கிறது.

**- ஆசிரியர்**

# இந்தி கற்கும் கட்டிட மேஸ்திரிகள்

தமிழகத்தில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள 80 சதவீத வட மாநில தொழிலாளர்களிடம் வேலை வாங்க வசதியாக தமிழக கட்டிட மேஸ்திரிகளும், களப் பொறியாளர்களும் இந்தி மொழியைக் கற்கின்றனர். பி.இ., பாலிடெக்னிக், ஐடிஐ முடித்து வேலைக்கு வருபவர்களில் இந்தி தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.தமிழ்நாட்டில் கட்டுமானத் தொழில், ஹோட்டல், சிறிய கடைகள் முதல் பேரங்காடி வரை, அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனை மையங்கள் உட்பட பல்வேறு தொழில்களில் ஏராளமான வட மாநில தொழிலாளர்கள் வேலை பார்க்கின்றனர்.

இதில் பிஹார், ஒடிசா, ராஜஸ்தான் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் கணிசமாக திட்டப் பொறியாளர், திட்ட மேலாளர், ஒப்பந்ததாரர் போன்றவர்களுக்கு பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. அதனால், அவர்கள் இந்தி மொழியைக் கற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஆர்வமுள்ள வட மாநில தொழிலாளர்களும் தமிழ் கற்று வருகின்றனர். தமிழ், தெலுங்கு மொழிஇதுகுறித்து இந்திய ரியல் எஸ்டேட் நிறுவன சங்கங்களின் கூட்டமைப்பின் (கிரெடாய்) சென்னை பிரிவு துணைத் தலைவர் சிவகுருநாதன் கூறியதாவது:

தமிழ்நாட்டில் கட்டுமானத் தொழிலில் 70 முதல் 80 சதவீதம் வரை வட மாநில தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.



உள்ளனர். ஆந்திராவைச் சேர்ந்த தொழிலாளர்களும் குறிப்பிட்டத்தக்க அளவில் இருக்கின்றனர். குறிப்பாக கட்டுமானத் தொழிலில் 70 முதல் 80 சதவீதம் வட இந்திய தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு இந்தி மொழி மட்டுமே தெரியும்என்பதால் கட்டுமானப் பணியின்போது தமிழ் மொழி தெரிந்த மேஸ்திரி, களப் பொறியாளர், அவர்களிடம் இந்தி மொழியில் பேசி வேலைவாங்குவது தவிர்க்க முடியாததாகி விட்டது. மீதமுள்ள 20 சதவீதம் பேர் தமிழர்களாகவும், தெலுங்கு மக்களாகவும் உள்ளனர்.அவர்களில் பெரும்பாலானோர் கள கண்காணிப்பாளர், மேலாளர்என்ற உயர் அலுவலர் போன்றபணியைத்தான் மேற்கொள்கின்றனர். அதனால், கட்டுமானப் பணியின்போது வட மாநில





தொழிலாளர்களுடன் பேசி வேலை வாங்குவதற்காக கட்டிட மேஸ்திரி, களப் பொறியாளர், திட்டப் பொறியாளர், திட்ட மேலாளர் ஆகியோருக்கு இந்தி தெரிந்திருக்க வேண்டியுள்ளது. குறிப்பாக கட்டிட மேஸ்திரி, களப் பொறியாளருக்கு இந்தி தெரிந்திருப்பது கட்டாயம் என்றாகிவிட்டது.

கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிட மேஸ்திரிக்கு இந்தி தெரியாது. இன்று இந்தி பேசத் தெரியாத மேஸ்திரியே இல்லை என்று சொல்லலாம். வேலையில் முன்னுரிமை கிடைக்கும் என்ற காரணத்தால் பி.இ., பாலிடெக்னிக், ஐடிஐ முடித்து வேலைக்கு வரும் களப் பொறியாளர்கள் இந்தி மொழியில் அடிப்படை அறிவு உள்ளவர்களாகவே வரு கின்றனர். இதனால், தமிழ்நாட்டில் சுமார் ரூ.28 ஆயிரம் கோடி மதிப்பில் நடைபெறும் 400 கட்டுமான திட்டப் பணிகளில் எவ்விதத் தடங்கலும் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

வேலை ஒருங்கிணைப்புஇந்திய ரியல் எஸ்டேட் நிறுவன சங்கங்களின் கூட்டமைப்பு (கிரெடாய்) தமிழ்நாடு பிரிவு முன்னாள் தலைவர் என்.நந்தகுமார் கூறும்போது, “கட்டுமானத் தொழிலில் வேலை ஒருங்கிணைப்பு மிகவும் அவசியம். இத்தொழிலில் உள்ளவர்களின் பெரும்பாலானோர் வட மாநிலத்தவர்களாக இருப்பதால் 10 முதல் 15 ஆண்டுகள் தொழில் அனுபவம் உள்ள கட்டிட மேஸ்திரியால்கூட உரிய முறையில் அவர்களிடம் வேலை வாங்க முடியாத நிலை இருந்தது. இந்தி கற்றுக் கொண்டால்தான் வட மாநில தொழிலாளர்களை எளிதாக வேலை வாங்க முடியும் என்ற நிலை ஏற்பட்டதால், அவர்களிடம் அரைகுறையாகப் பேசிப் பேசி மேஸ்திரிகள் இந்தி கற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் அவர்களுக்கு இந்தியில் எழுதத் தெரியாது” என்றார்.

**- இர்வின்**

பணி செயல்பாடு குறித்து ஆராய்வதற்காக சுமார் 1,200 ஐபிஎஸ் அதிகாரிகள் கண்காணிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சக உயரதிகாரி ஒருவர் கூறியதாவது: ஐபிஎஸ் அதிகாரிகளின் செயல்திறன் எவ்வாறு உள்ளது என்பதை கண்காணிப்பதற்காக, கடந்த 3 ஆண்டுகளில் 1,181 ஐபிஎஸ் அதிகாரிகளின் பணி பதிவேடுகளை மத்திய உள்துறை அமைச்சகம் மறு ஆய்வு செய்து வந்தது.

இது தொடர் நடவடிக்கை என்பதால், இந்தக் கண்காணிப்பு வளையத்துக்கு மேலும் பல அதிகாரிகள் கொண்டு வரப்படுவார்கள். இந்த ஆய்வின்போது, பணியில் சிறப்பாக செயல்படாததாக கண்டறியப்படும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அகில இந்திய பணிகள் சட்டம் 16 (3)-ன் படி இத்தகைய கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இந்த சட்டப்பிரிவின்படி, சிறப்பாக செயல்படாத ஐபிஎஸ் அதிகாரிகளை பொது நல அடிப்படையில் பணியிலிருந்து ஓய்வுபெறுமாறு கூறி அவர்களுக்கு 3 மாத நோட்டீஸ் அனுப்பப்படும். மாநில அரசுடன் மத்திய அரசு கலந்தாலோசித்து இந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

# தமிழக அரசு

# ஐபிஎஸ் அதிகாரிகளை கண்காணிக்கிறதா?






இந்நிலையில், மேற்கூறிய 1181 ஐபிஎஸ் அதிகாரிகளிடம் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பின் முடிவில், 10 பேரை முன்கூட்டியே ஓய்வில் செல்லுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். நாடு முழுவதுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள மொத்த ஐபிஎஸ் அதிகாரிகள் எண்ணிக்கை 4,940. எனினும், 3,972 பேர் பணியில் இருப்பதாக உள்துறை அமைச்சக புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

ஐபிஎஸ் அதிகாரிகள் செயல்பாடுகளை கண்காணிக்க பணி பதிவேடுகளை ஆய்வுசெய்யும் நடைமறையை மோடி அரசு கொண்டுவந்துள்ளது. இதன்மூலம், பணியில் யார் ஒழுங்காக செயல்படுகிறார்கள், யார் செயல்படுவதில்லை என்பது தெரிந்துவிடும். இதில், சிறப்பாக பணிபுரியும் அதிகாரிகள் மேலும் ஊக்குவிக்கப்படுவர். பணியில் தொய்வு காட்டுபவர்கள் தன்னை மேம்படுத்திக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். இல்லையெனில், அவர்கள் பணியிலிருந்து வெளியேற வேண்டி வரும்.

முன்னதாக, 2015 முதல் 2018-ம் ஆண்டு வரையில், 1,143 ஐபிஎஸ் அதிகாரிகளின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டதில், 4 அதிகாரிகளின் செயல்பாடு திருப்திகரமாக இல்லாததால், அவர்களை முன்கூட்டியே ஓய்வுபெற பரிந்துரைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

- கனக துர்கா


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை ®

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-8 இதழ்-1 ஜூன்-2019

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
V.அருணாச்சலம், A.C.குமார், S.அனந்த கிருஷ்ணன், M.A.,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ராம்குமார் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
A.பாலகிருஷ்ணன் கோவை, நாகராஜ் மூணாறு
R.ஜெயா தென்சென்னை, K.அழகர்சாமி வட சென்னை
S.ரமேஷ் காஞ்சி, மாரிமுத்து உளுந்தூர்பேட்டை
சுசி ஈஸ்வர் விருதுநகர், N.சிலம்பரசு தர்மபுரி
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, குருபாலகிருஷ்ணன்

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம்
K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்
B.நாராயணசாமி, நீலகண்டன், N.சீனிவாசன்
R.பார்த்தசாரதி, G.ஆனந்த்குமார், S.மோகன்

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M.அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**

நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

# தலை நிமிர்ந்த அதிமுக

சட்டப்பேரவை இடைத்தேர்தலில் 9 இடங்களை கைப்பற்றியுள்ள நிலையில், 123 எம்எல்ஏக்களுடன் அதிமுக ஆட்சியை தக்க வைத்துக் கொண்டுள்ளது. கடந்த 2016 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் சிறிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து 234 தொகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்தில் அதிமுக போட்டியிட்டது. இதில், 136 தொகுதிகளை அதிமுக கைப்பற்றியது. திமுக 89 தொகுதிகளிலும் கூட்டணி கட்சிகளான காங்கிரஸ் 8, ஐயுஎம்எல் 1 தொகுதியிலும் வெற்றி பெற்றன.

கடந்த 2016-ம் ஆண்டு இறுதி யில் முதல்வராக இருந்த ஜெய லலிதா காலமானதால் சட்டப்பேரவையில் அதிமுகவின் பலம் பேர வைத் தலைவருடன் சேர்த்து 135 ஆக குறைந்தது. ஜெயலலிதா மறைவால் அவர் போட்டி யிட்ட ஆர்.கே.நகர் தொகுதியில் இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. இதில், டிடிவி தினகரன் சுயேச்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதற்கிடையே, அதிமுகவில் ஏற் பட்ட மாற்றங்களால், டிடிவி தினகர னுக்கு ஆதரவாக செயல்பட்ட 18 எம்எல்ஏக்கள் தகுதிநீக்கம் செய்யப்பட்டனர். அந்த 18 சட்டப் பேரவை தொகுதிகளும் காலியான தாக அறிவிக்கப்பட்டது. அதிமுக எம்எல்ஏக்களாக இருந்த ஏ.கே.போஸ் (திருப்பரங் குன்றம்), கனகராஜ் (சூலூர்) ஆகியோர் மறைவால் அந்த 2 தொகுதிகளும் காலியானது. ஒசூர் தொகுதி எம்எல்ஏவாக இருந்த அமைச்சர் பாலகிருஷ்ணா ரெட்டி, வழக்கு ஒன்றில் தண்டனை பெற்றதால் அவரது எம்எல்ஏ பதவி பறிக்கப்பட்டது.

எனவே, ஒசூர் தொகுதி யும் காலியானது. இதன் காரண மாக, சட்டப்பேரவையில் அதிமுக வின் பலம் 114 ஆக குறைந்தது.திமுக தலைவர் கருணாநிதி மறைவால் அவர் போட்டியிட்ட திருவாரூர் தொகுதியும் காலி யானது. இதை யடுத்து திமுகவின் பலம் 88 ஆனது. பேரவையில் பெரும்பான்மை பெற 117 எம்எல்ஏக்கள் ஆதரவு இருக்க வேண்டும். இந்நிலை யில், தமிழகத்தில் காலியாக இருந்த 22 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் மக்களவைத் தேர்தலுடன் சேர்த்து



இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. அதில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டன.இதில், அதிமுக 9 தொகுதிகளை கைப்பற்றியுள்ளது. திமுக 13 தொகுதிகளை பிடித்துள்ளது. இதன் மூலம், பேரவையில் அதிமுகவின் பலம் 123 ஆகவும், திமுகவின் பலம் தனியாக 101 ஆகவும் உயர்ந்துள்ளது. காங்கிரஸ் மற்றும் ஐயுஎம்எல் சேர்த்து திமுகவின் பலம் 110 ஆக உள்ளது.

நாங்குநேரி தொகுதி எம்எல்ஏ எச்.வசந்தகுமார், கன்னியாகுமரி மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். அவர் தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தால் நாங்குநேரி தொகுதி காலியாக இருக்கும். அப்போது திமுக கூட்டணியின் பலம் 109 ஆக குறையும்.இதற்கிடையே, தினகரனுக்கு





ஆதரவாக செயல்பட்டதாக ரத்தின சபாபதி (அறந்தாங்கி), கலைச் செல்வன் (விருத்தாசலம்), பிரபு (கள்ளக்குறிச்சி) ஆகிய மூன்று அதிமுக எம்எல்ஏக்களுக்கும் விளக் கம் கேட்டு பேரவைத் தலைவர் சமீபத்தில் நோட்டீஸ் அனுப்பினார். அந்த நோட்டீஸை எதிர்த்து அவர்கள் மூவரும் உச்ச நீதிமன்றம் சென்று, பேரவைத் தலைவர் நட வடிக்கைக்கு இடைக்கால தடை பெற்றுள்ளனர்.

இது தவிர, அதிமுகவின் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு வென்ற தமிமுன் அன்சாரி (மனிதநேய ஜனநாயக கட்சி), கருணாஸ் (முக்குலத்தோர் புலிப்படை) ஆகி யோரும் அதிமுக தலைமைக்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ளனர்.தற்போதைய சூழலில், அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டால், பெரும் பான்மையான 117 விட அதிக மாக 123 உறுப்பினர்களை கொண்டி ருக்கும் அதிமுக அரசு சுலபமாக வெற்றி பெற்றுவிடும். ஒருவேளை, தினகரன் ஆதரவு எம்எல்ஏக்கள் 3 பேர், தமிமுன் அன்சாரி, கருணாஸ் ஆகியோர் எதிர்த்து வாக்களித்தாலும், இக்கட்டான சூழலில் அர சுக்கு பேரவைத் தலைவர் ஆதர வளிப்பார் என்பதால் 118 வாக்குகள் பெற்று அதிமுக வெற்றி பெற்று விடும் என்ற நிலையே உள்ளது. கீனவே, இந்த இடைத்தேர்தல் வெற்றி மூலம் அதிமுக தனது ஆட் சியை தக்கவைத்துக் கொண்டுள் ளது என்றே கூறப்படுகிறது.

**- முனைவர் ஆ. மவுரியன்**



# ஹைட்ரோ கார்பன் திட்டத்தை அமல்படுத்த விடமாட்டோம்

## அன்புமணி எச்சரிக்கை

ஹைட்ரோ கார்பன் திட்டத்தை அமல்படுத்த விடமாட்டோம் என அன்புமணி கூறினார். சென்னை விமான நிலையத்தில் பாமக இளைஞரணி தலைவர் அன்புமணி நிருபர்களிடம் கூறியதாவது: சென்னையில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம், காலநிலை, பருவநிலை மாற்றம். அதுபற்றி யாரும் இதுவரை பேசவில்லை. இது திடீரென வந்தது கிடையாது. இனிவரும் காலங்களில் வறட்சி இன்னும் கடுமையாக இருக்கும். 3 பருவநிலை மாற்றத்தால் இதுபோன்ற வறட்சியும், பெருவெள்ளமும் மாறி மாறி வரும்.

தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ளது 2 ஆண்டு பிரச்னை கிடையாது. 50 ஆண்டுகால பிரச்னை. நீர் மேலாண்மைக்கும் முக்கியத்துவம் கொடுத்து, மழை காலங்களில் உபரிநீரை சேமிக்க வேண்டும். கோதாவரியையும், காவிரியையும் இணைக்க வேண்டும். இதற்காக மத்திய அரசை வலியுறுத்துவோம். இந்த திட்டத்தை நிறைவேற்றினால் தெலங்கானா, ஆந்திரா, தமிழகத்தில் தண்ணீர் பிரச்னை ஓரளவு குறையும். இந்த திட்டத்தால் தமிழகத்துக்கு 200 டிஎம்சி தண்ணீர் கிடைக்கும். நிரந்தர தீர்வு ஏற்படும். மதுவிலக்கு என்ற எங்களுடைய கொள்கையை நாங்கள் விட்டு கொடுக்க மாட்டோம். இப்போதுதான் கூட்டணி சேர்ந்திருக்கிறோம். அதேநேரத்தில் கொள்கையில் உறுதியாக இருப்போம். குறிப்பாக, ஹைட்ரோ கார்பன் திட்டத்தை கடுமையாக எதிர்ப்போம். டெல்டா பகுதியில் ஹைட்ரோ கார்பன் திட்டத்தை அமல்படுத்தவிடாமல் தடுப்போம்.

டெல்டா மாவட்டம் காலம் காலமாக மக்களுக்கு உணவு அளித்து கொண்டிருக்கும் ஒரு மண். அந்த மண், அப்படியே இருக்க வேண்டும். கூட்டணியில் இருந்தாலும் சரி,




இல்லையென்றாலும் எங்களது கொள்கையை விட்டு கொடுக்க மாட்டோம். எதிர்க்க வேண்டிய திட்டங்களை கடுமையாக எதிர்ப்போம். கூட்டணியில் இருந்தால் உள்ளிருந்தே எதிர்ப்போம். அழுத்தம் கொடுப்போம். மக்களுக்கு எதிரான சுற்றுச்சூழலை பாதிக்கின்ற திட்டங்களை தமிழகத்தில் அமல்படுத்த விடமாட்டோம்.

# அழிவை சந்திக்க இருக்கும் பிச்சாவரம் காடுகள்



ஹைட்ரோகார்பன் திட்டத்தால் விவசாயம், மீன்வளம், குடிநீர் வளம் மட்டுமின்றி மாங்ரோவ் காடுகளும் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. காவிரி படுகையில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு எடுக்கும் பணி கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டது. இந்த நிலையில் ஹைட்ரோகார்பன் திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. காவிரி படுகையை 2 மண்டலங்களாக பிரித்து மொத்தமாக 274 ஹைட்ரோகார்பன் கிணறுகள் அமைக்கப்பட உள்ளன. இதில் முதல் மண்டலமான விழுப்புரம், புதுச்சேரியை சுற்றி 116 கிணறுகளும், கடலூரில் இருந்து நாகப்பட்டினம் வரை உள்ள 2-வது மண்டலத்தில் 158 கிணறுகளும் அமைக்கப்பட உள்ளன.

இந்த கிணறுகள் பூமிக்கு கீழே 4,500 மீ. ஆழம் வரைதோண்டப்படும் என கூறப்படுகிறது. இவை, காவிரி படுகையில் கடற்பகுதியில் அமைக்கப்பட உள்ளன. இப்படி கடற்பகுதியில் கிணறுகள் அமைக்கப்படுவதால் கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே பிச்சாவரத்தில் உள்ள இயற்கை எழில் கொஞ்சம் மாங்ரோவ் காடுகள் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மாங்குரோவ் காடுகள் கடல் நீரில் வளர்வது இல்லை. கடல் நீரைஉறிஞ்சி, அதில் உள்ள உப்பை பிரித்து, நல்ல நீரில்தான் வளர்கின்றன. மரங்களின் விழுதுகள், ஆலம்விழுதுபோல படர்ந்து விடும். பிச்சாவரத்தில் உள்ள அலையாத்திக் காடு இந்தியாவில் இரண்டாவது பெரிய சதுப்பு நில தாவரங்களைக் கொண்ட காடு ஆகும்.



நிலமும் கடலும் சேரும் பகுதிகள் மண்ணும் நீரும் சேர்ந்து சேற்றுப் பகுதியாகவும் சில அடி உயரத்துக்கு நீர் நிறைந்தும் இருக்கும். இப்பகுதி சதுப்பு நிலம் ஆகும். பிச்சாவரம் சதுப்பு நிலப் பகுதியில் நீரோட்டம் கொண்ட மரங்களின் வேர்ப் பகுதியில்தான் எண்ணற்ற மீன் இனங்களும் ஆமைகளும் நண்டு இனங்களும் பாதுகாப்பாக வசிக்கின்றன. இதன் வேர் பகுதி சிக்கல் மிகுந்ததாய் இருப்பதால், மற்ற உயிரிடம் இருந்துமீன் இனம் தம்மை பாதுகாத்துக் கொள்கிறது. இப்படி நீர்வாழ் உயிர்களின் பெருக்கத்துக்கு துணையாய் இருக்கும் இந்த காட்டின் மேற்பகுதியில் கோணமூக்கு உள்ளான், ஊசிவால்வாத்து, சாம்பல் தலை ஆள்காட்டி, சோழகுருவி, பவளகொத்தி என பல்வேறு பறவை இனங்களும் தங்களின் வாழ்விடத்தை அமைத்துக் கொள்கின்றன. இதனால், உணவு சங்கிலி சமநிலையில் பராமரிக்கப்படுகிறது.

கடலையே நம்பியிருக்கும் மீனவர்களுக்கு இந்த சுந்தரவன காடுகள் ஒரு வர பிரசாதம். பிச்சாவரத்தில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இயற்கை சூழலுடன் மருத்துவ குணம் கொண்டசதுப்புநிலக்காட்டில் சுரப்புன்னை, தில்லை, திப்பராத்தி, வெண்கண்டல், நீர்முள்ளி, பண்ணுக்குச்சி, நரிகண்டல், கருங்கண்டல் எனும் 20 வகையான தாவரங்களும், வங்காரவாசி, உயிரி, கோழிக்கால், உமிரி, சங்குசெடி, பீஞ் சல் உள்ளிட்ட 18 வகையான மூலிகை தாவரங்களும்உள்ளது. இந்த சதுப்பு நில (மாங்குரோவ்) காடுகளில் மூலிகை செடிகள் நிறைந்துள்ளன. இந்த சதுப்புநிலக்காட்டில்3,500-க்கும் மேற்பட்ட கால்வாய்கள் உள்ளன. இது இப்பகுதிக்கு இயற்கை அரணாக திகழ்ந்து வருகிறது. சுனாமியின்போது இப்பகுதி மீனவ மக்களுக்கு மிகப்பெரிய அரணாக இருந்ததால் பாதிப்புகள் குறைவாக இருந்தது. நீர்வாழ் உயிர்களின் பெருக்கத்துக்கு துணையாய் இருக்கும் பிச்சாவரம் சதுப்புநில காடுகள், தற்போது ஹைட்ரோகார்பன் திட்டத்தினால் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடல் பகுதியில் ஹைட்ரோகார்பன் எடுக்கப்படுவதால் மீன் உள்ளிட்ட உயிரினங்களும், கடலில் கலக்கும் வேதிப்பொருள்களால் மாங்ரோவ் காடுகள் கொஞ்சம், கொஞ்சமாக அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.இதனால் இயற்கையின் உணவு சங்கிலி, சம நிலையில் பராமரிக்கப்படுவது பாதிக்கப்படும். இப்பகுதி பாலைவனமாக மாறும் நிலை ஏற்படும் என்று சூழலியல் ஆர்வலர்கள் எச்சரிக்கின்றனர்.

**- முனைவர் M. சத்தியராஜ்**

# குறைந்தது நிலத்தடி நீர்மட்டம்: நடவடிக்கை எடுக்காத அரசு



நிலத்தடி நீர் 8 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 26 மாவட்டங்களில் குறைந்துள்ள நிலையில் நிலத்தடி நீர் மட்டத்தை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதை தடுக்க புது விதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய நிலத்தடி நீர் வாரியம் தமிழக அரசுக்கு அறிவுரை வழங்கியுள்ளது. தமிழகத்தில் பருவமழை பொய்த்ததன் காரணமாகவும், நிலத்தடி நீர் பயன்பாடு அதிகரித்ததன் காரணமாகவும் ஒவ்வொரு ஆண்டும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. இதன் விளைவாக கடந்த 8 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நிலத்தடி நீர்மட்டம் அதளபாதாளத்திற்கு சென்று விட்டது.

குறிப்பாக, கடந்த 2011ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் 4.7 மீட்டராக இருந்த நிலையில், 2019 ஏப்ரல் மாதத்தில் 6.48 மீ ஆகவும், காஞ்சிபுரத்தில் 4.62ல் 5.41 ஆகவும், கோவையில் 9.56ல் 13.57 ஆகவும், திருச்சி 7.28ல் 10.96 ஆகவும், வேலூர் 5.88ல் 10.62 ஆகவும் தர்மபுரியில் 7.21ல் 14.28 ஆகவும், கிருஷ்ணகிரியில் 7ல் 9.19 ஆகவும், கடலூரில் 4.78ல் 7.08 ஆகவும், விழுப்புரம் 4.51ல் 9.17 ஆகவும், திருவாரூர் 2.93ல் 5.67 ஆகவும், கரூர் 6.80ல் 10.96 ஆகவும், பெரம்பலூர் 5.44ல் 13.65 ஆகவும், புதுக்கோட்டை 4.79ல் 8.26 ஆகவும், சேலம் 8.45ல் 11.85 ஆகவும், நாமக்கல் 9.1ல் 11.85 ஆகவும், ஈரோட்டில் 6.09ல் 13.36 ஆகவும், மதுரை 4.12ல் 8.08 ஆகவும், ராமநாதபுரத்தில் 4.22ல் 4.68 ஆகவும், சிவகங்கை 5.38ல் 9.08 ஆகவும், தஞ்சாவூர் 3.31ல் 3.58 ஆகவும் தேனி 6.41ல் 9.17 ஆகவும், தூத்துக்குடி 3.32ல் 6.22ஆகவும், விருதுநகர் 6.78ல் 10.10 ஆகவும், திருவண்ணாமலை 5.19ல் 9.50 ஆகவும், திண்டுக்கல் 6.84ல் 10.90 ஆகவும், கன்னியாகுமரி 6.2ல் 7.04 மீட்டராகவும் குறைந்துள்ளது.

குறிப்பாக, கடந்த 8 ஆண்டுகளில் 3 மீட்டர் முதல் 8 மீட்டர் வரை நிலத்தடி நீர் மட்டம் சரிந்து இருப்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது. ஒவ்வொரு மாவட்டமும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து

வரும் சூழ்நிலையில், தமிழகத்தின் பல இடங்களில் 400 அடி வரை போர்வெல் போட்டாலும் தண்ணீர் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே, நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ள பகுதிகளில் தண்ணீர் எடுக்க கட்டுப்பாடு விதிப்பது தொடர்பாக ஒவ்வொரு ஆண்டும் தாலுகா அளவில் ஆய்வு முடிவு அரசுக்கு சமர்பிக்கப்படுகிறது. ஆனால், இந்த ஆய்வு முடிவை வைத்து நிலத்தடி நீர் எடுக்க எந்த கட்டுபாடும் விதிக்கப்படவில்லை. இதனால், தொடர்ந்து நிலத்தடி நீர் மட்டம் அதிகளவில் உறிஞ்சப்பட்டு வந்தததால் தற்போது அதளபாதாளத்திற்கு சென்று விட்டது. இந்த நிலையில், மத்திய நிலத்தடி நீர் வாரியம் தமிழக அரசுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளது. அதில், 'தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. இந்நிலையில் நிலத்தடி நீர் மட்டத்தை பெருக்க பல்வேறு



திட்டங்களை செயல்படுத்த வேண்டும். இல்லையெனில் வரும் காலங்களில் நிலத்தடி நீர் மூலம் தண்ணீர் பெற முடியாத நிலை ஏற்படும். மேலும். நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதை தடுக்க நிலத்தடி நீர் பயன்பாட்டு தொடர்பாக புதிய விதிகள் ஒன்றை உருவாக்க வேண்டும்' என்று அந்த கடித்தில் கூறியுள்ளது.

**- வீ. சிவசங்கரன்**


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

**ஆண்/பெண் நிருபர்கள் தேவை**

தொடர்புக்கு

**மக்கள் விசாரணை ✷ அருணை முரசு**

**Cell : 93821 33334 / 044 - 48615321**

**Email : writermouriyan@gmail.com**

# சாகாக் கலை எனப்படும் காயகல்பம்

Dr. K. ராஜமாணிக்கம்

**எளிய காயகற்ப முறைகள்:** குமரி கற்பம் என்ற செங்கற்றாழை கற்பம் சித்தர்கள் குறிப்பிடும் காய கற்ப மூலிகை, தாவர வகைகளில் இன்றைய கால கட்டத்தில் எளிதாக கிடைக்கும் வகைகளில் ஒன்றுதான் கற்றாழை ஆகும். இதனைப் பொதுவாக சித்தர்கள் 'குமரி' எனக் குறிப்பிடுகின்றனர். உடலினை என்றும் இளமையாக வைக்கும் தன்மை இதற்குண்டு என்பதனை சித்தர்கள் தங்கள் மெய்ஞானத்தால் கண்டறிந்துள்ளனர். பொதுவாக கற்றாழையில் உடலிற்குத் தேவையான வைட்டமின் சத்துக்கள் ஏராளமாக உண்டு. இது உடலில் சேரும் நஞ்சுகளை வெளியேற்றி உடலின் செல்களை உயிர்ப்புடன் காக்கின்றது. எனவே இதனை முறைப் படி உண்டோமானால் முதுமை தோன்றாமல் தேகத்தை என்றும் இளமையுடன் (காய கற்பம்) காத்துக் கொள்ளலாம்.

சிவப்புக் கற்றாழையை மேலே உள்ள தோலை சீவி நீக்கி விட்டு அதன் சதைப் பகுதியை மட்டும் எடுத்து தண்ணீரில் அலசி விடவும். பிறகு அந்த தண்ணீரை ஊற்றி விட்டு புது தண்ணீரை விட்டு அலசவும். இதே போல் ஏழு முறை தண்ணீர் விட்டு கழுவி விட்டு எடுத்து திரிகடுகு தூளில் அதாவது சுக்கு மிளகு திப்பிலி ஆகியவற்றின் பொடி (திரிகடுகம் விளக்கம் கடைசியில் பார்க்கவும்) திரிகடுகு தூளில் பிரட்டி அதில் தேன் ஊற்றி 9 நாள் சூரிய ஒளி படும்படி வைத்தெடுத்து இக்கற்றாழை கற்பத்தை மென்று உண்ணவும். இதேபோல் காலை - மாலை உண்ணவும். தொடர்ந்து ஒரு மண்டலம் 48 நாள் உண்ணவும். இதுவே காயகற்பம் ஆகும்.

**இதன் பலன்கள் :** உடலில் கஸ்தூரி வாசனை வீசும். உடலில் வியர்வை வெளியேறாது, தலை முடி கருக்கும், பார்வைத்திறன் அதிகரிக்கும். (நரை, திரை) மாறும். உடலில் முழுதும் பிராணன் நிரம்பும். சோம்பல், கொட்டாவி, தூக்கம் வராது. மனம் விழிப்பு நிலையில் நின்று "குண்டலினி" யோகம் சித்திக்கும். மேற்படி 7 முறை கழுவிய சோற்றை திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) சுரணமிட்டு பிசறி சிறிது பசு நெய் விட்டு பிசறி நாட்டு சர்க்கரை சிறிது சேர்த்து காலை வெறும் வயிற்றில் விழுங்கவும். இப்படி காலை, மாலை 48 நாட்கள் சப்பிட்டுவரவும். ஒருமண்டலம் சாபிட்டால் மூலம், பௌத்திரம், 18 வகை குஷ்டநோய்கள் பனிபோல் விலகும். இப்படி ஒரு வருடம் சாப்பிட்டு வந்தால் உடல் ஆரோக்கியம், திடமும் உண்டாகி ஞானியாவான். 12 வருடம் சாப்பிட்டால் சித்தனுக்கு சித்தனாகி, உமிழ்நீரில் சூதத்தை கட்டுவான்.

## வள்ளலார் அருளிய கல்ப மருந்து



**குறிப்பு:** மருந்தை வெயில் காலத்தில் சாப்பிட ஆரம்பிக்கவும். உடல் அதிகம் குளிர்ச்சி உற்றால் திரிகடுகை அதிகம் சேர்த்து சாப்பிடவும். இல்லறத்தை துறந்தவர்களுக்கு இது நன்மை பயக்கும்.

**திரிகடுக காயகற்பம்:** திரிகடுகம் ஓர் அறிமுகம்: திரி என்றால் மூன்று. கடுகம் என்றால் மருந்து. மூன்று மூலங்களினால் ஆன மருந்துதான் திரிகடுகம். பழந்தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்திருந்த இந்த மருந்தைப் பற்றி, இன்றைய தலைமுறையினருக்கு எத்தனை தெரியும் என்பது கேள்விக்குரியது. திரிகடுகம், திரிகடுகு என்றழைக்கப் படும் இந்த மருந்துதான் பழந்தமிழரின் நோயற்ற பெருவாழ்வுக்கு அடிப்படையாகவும், ஆதாரமாகவும் இருந்ததென்றால் மிகையில்லை. திரிகடுகம் உடலையும், உயிரையும் காக்கும் எளிய அருமருந்து. நமது முன்னோர்களின் வாழ்வில் இந்த மருந்து இரண்டற கலந்திருந்தது. கால ஓட்டத்தில் நாம் மறந்துவிட்ட நமது மேலான அடையாளங்களில் இதுவும் ஒன்று. திரிகடுகத்தைக் கொண்டு உடலை பேணும் கற்பம் தயாரிக்கும் முறை. இந்த காயகற்பம் தயாரிக்கும் முறை கருவூரார் அருளிய "கருவூரார் வாதகாவியம்" என்னும் நூலில் காணக் கிடைக்கிறது. இந்த கற்பத்தை "திரிகடுக கற்பம்" என்கிறார் கருவூரார்.

**அற்புதமா தாகவொரு - மருந்து**
**அறைகிறேன் இன்னதென்று தெரிந்து கொள்ளும்**
**கற்பமொன்று விள்ளுகிறேன் - நல்ல**
**கற்றாழைஞ் சொறெடுத்து விஸ்தாரமாய் வெருகடி**
**திரிகடுகு பொடிபண்ணி - வெருகடி**
**தீர்க்கமுடன் கற்றாழஞ் சோற்றுடனே**
**பிரட்டியே தின்றுவரக் - காயம்**
**பிலக்குமப்பா நரை திரைமாறும்**
**சித்தருக்குச் சித்தனப்பா - பர**
**தேசியர்க்குப் பர தேசிகனாம்**
**ஞானிக்கு ஞானியப்பா - அஞ்**
**ஞானிக்கஞ் ஞானியாய்த் தோணுமப்பா**
**இல்லத்துக் கில்லனுமாய்க் - கோடிவய**
**திருப்பான் பதினாறு வயதது போல்**

*கற்றாழை சோற்றில் வெருகடி அளவு எடுத்து அதனுடன் திரிகடுக சூரணத்தை வெருகடி அளவு சேர்த்து நன்றாக பிரட்டிக் உண்ண வேண்டுமாம். இப்படி சாப்பிட்டு வர நரைதிரை மாறி உடலும் உறுதியாகுமாம். மேலும் அத்தகையவர்கள் சித்தருக்கு சித்தனாகவும், பரதேசிகளுக்கு பரதேசியாகவும், ஞானிகளுக்கு ஞானியாகவும், இல்லறத்தாருக்கு இல்லறத்தானாக சிறந்து பலகாலம் பதினாறுவயது போல் வாழலாம் என்கிறார். எல்லாம் சரிதான், எத்தனை நாட்கள்? எந்த வேளையில் உண்பது?*

**இதுவொரு வருடங் கொண்டால் - இவனுக்**
**கிப்பிறவி போகப்பிற் பிறவியில்லை**
**தேவலோகம் நாகலோகம் - முழுதும்**
**தேவ னிவனென்றே செப்பலாகும்**
**நேராகவே தோன்றும் - மல**
**நீர்விட்ட இடங்களில் வர்ணம்பேதிக்கும்**
**அமிர்தம் ரசத்தைக்கட்டும் - அவன்**
**அவனியிற் பேர்பெற்ற சித்தனப்பா**

*இந்த கற்பத்தினை காலை அல்லது மாலை வேளையில் தொடர்ந்து ஒருவருடம் உண்ண வேண்டுமாம். அப்படி உண்பதால் இனி பிறப்பே இருக்க மாட்டாது என்கிறார். இந்த காயகற்பம் உண்டவர்கள் உலகில் பெயர் பெற்ற சித்தனாக இருப்பார்கள் என்கிறார்.*



**வெருகடி** = *வெருகு என்பது காட்டுப் பூனையை குறிக்கும். வெருகடி என்பது பூனை தன் காலில் உள்ள பெருவிரல் உள்ளிட்ட மூன்று விரல்களினால் எடுக்கு மண்ணின் அளவு. பழந்தமிழர் அளவை குறியீடுகளில் வெருகடியும் ஒன்று.*

*சுக்கு, மிளகு, திப்பிலி என்கிற இந்த மூன்றும் கூடியதுதான் திரிகடுகம். ஆம், எளிதாய் கிடைக்கிற இந்த மூன்று தாவரப் பொருட்களே நோயற்ற வாழ்வின் ரகசிய மருந்து. திரிகடுகம் போலவே திரிபலா என்கிற ஒன்றும் தமிழர்கள் வாழ்வில் முக்கிய இடம் பெற்றிருந்தது. நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய் மூன்றும் சேர்ந்ததுதான் திரிபலா. திரிகடுகத்தை மும்மருந்து என்றும், திரிபலாவை முப்பலை என்றும் அழைப்பர்.*



*திரிகடுகத்தின் மகத்துவம் பற்றி சொல்ல வரும்போது தமிழ் இலக்கியத்தில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான "திரிகடுகம்" பற்றி கூறியே ஆகவேண்டும். நல்லாதனார் என்பவர் இயற்றிய இந்த நூலின் பெருமையை பழந்தமிழ் பாடல் ஒன்று பின்வருமாறு சொல்கிறது.*

**உலகில் கடுகம் உடலின் நோய் மாற்றும்;**
**அலகு இல் அக நோய் அகற்றும் - நிலை கொள்**
**திரிகடுகம் என்னும் திகழ் தமிழ்ச் சங்கம்**
**மருவு நல்லாதன் மருந்து.**

*உடலில் இருக்கும் நோய்களை அகற்றும் சக்தி திரிகடுகம் என்ற மருந்துக்கு இருக்கிறது அதைப்போல நல்லாதன் என்றவர் எழுதிய திரிகடுகம் என்னும் நூலுக்கு மனதின் சஞ்சலங்களான அக நோயை நீக்கும் தன்மை உள்ளது என்கின்றனர். இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலிலும் மூன்று மூன்று அறங்கள் சொல்லப்படுகின்றன. இதை பின்பற்றி நடப்போர் உள்ளத்திலே ஒரு நோயும் இன்றி பெருவாழ்வு வாழமுடியும். எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக கருதப்படும் "பிங்கலந்தை" என்கிற பிங்கலநிகண்டுவிலும் திரிகடுகம் பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கிறது. இது தவிர சித்தர் பெருமக்கள் பாடல்களிலும் திரிகடுகம் பற்றிய தகவல்கள் காணக் கிடைக்கின்றன.*

**- தொடரும்**

# மாணவர்களே எச்சரிக்கை: அரசுப் பணிக்கு உதவாத படிப்புகள்




தமிழகத்தைச் சேர்ந்த சில பல்கலைக்கழகங்களும் கல்வி நிறுவனங்களும் வழங்கிவரும் 50-க்கும் மேற்பட்ட பட்டப்படிப்புகள் அரசு வேலைவாய்ப்புக்குத் தகுதியானவை அல்ல என்று தமிழக அரசு கடந்த வாரம் அறிவித்தது. இது தொடர்பாகத் தமிழக அரசு வெளியிட்ட அரசாணையில் பெரியார் பல்கலைக்கழகம் வழங்கும் பி.சி.ஏ. பட்டப் படிப்பானது பி.எஸ்சி. கணிதத்துக்கு நிகரல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரதியார் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், திருவள்ளூர் பல்கலைக்கழகம் வழங்கும் எம்.எஸ்சி. அப்ளைட் மைக்ரோபயாலஜி பட்டப் படிப்பானது எம்.எஸ்சி. விலங்கியலுக்கு நிகரல்ல. அதேபோல மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் வழங்கும் எம்.எஸ்சி. பயோகெமிக்கல் டெக்னாலஜி படிப்பானது எம்.எஸ்சி. பயோ கெமிஸ்ட்ரிக்கு நிகரானது அல்ல. பாரதியார் பல்கலைக்கழகம் வழங்கும் எம்.எஸ்சி. இண்டஸ்ட்ரியல் பயோடெக்னாலஜி, எம்.எஸ்சி. நானோ சயின்ஸ் அண்டு டெக்னாலஜி (இயற்பியல்) ஆகியவை எம்.எஸ்சி. பயோகெமிஸ்ட்ரி அல்லது எம்.எஸ்சி. இயற்பியலுக்கு நிகரானவை அல்ல. நான்காண்டுகள் வழங்கப்படும் டூயல் டிகிரி வகை பட்டப் படிப்புகளில் சில இந்தப் பட்டியலில் சிக்கியுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வழங்கும் பிபிஏ (டபுள் டிகிரி) பிபிஏ-வுக்கு நிகராகாது. குறிப்பாக, அந்தப் பல்கலைக்கழகம் வழங்கிவரும் பலவகையான எம்.பி.ஏ. படிப்புகள் எம்.பி.ஏ. பட்டப்படிப்பாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சிக்கல் எதனால்? அரசாணையத்தில் (GO. No. 66) 100 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இணையில்லாதவை (Non Equivalence) என்று பட்டியலிடப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் பட்டப் படிப்புகளை முடித்தவர்கள் இனி அரசுப் பணியாளர் தேர்வாணையப் பணிகளைப் பெற முடியாது என்பது மிகப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதில் இரண்டு விதமான சிக்கல்கள் இருப்பதாகக் கல்வியாளர்கள் கருதுகிறார்கள். ஒன்று, மக்களை ஈர்த்து வசூல் வேட்டை நடத்தப் பல கல்லூரிகள் இதுபோன்ற பட்டப் படிப்புகளை அறிமுகப்படுத்திவருகின்றன.

மறுபுறம் புதிய பாய்ச்சலுக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் சிந்தனையோடும் சில கல்வி நிறுவனங்கள் புதுமையான படிப்புகளை அறிமுகப் படுத்துகின்றன. தாங்கள் குறிவைத்த படிப்பில் சேர முடியாமல் போகும் நிலையில் அவற்றுக்கு இணையானவை என்று நம்பி இதுபோன்ற படிப்புகளில் மாணவர்கள் சேரும் அவலமும் நடந்துவிடுகிறது. எதுவானாலும் அரசுப்பணிக்கு இனி அவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஆகையால், மாணவர், பெற்றோர் எச்சரிக்கையுடன் தாங்கள் படிக்க விரும்பும் பட்டப்படிப்பு அரசு வேலைவாய்ப்புக்குத் தகுதி வாய்ந்ததா என்பதைச் சரிபார்த்துவிட்டு விண்ணப்பித்தல் நல்லது. மாணவர்களுக்கு எச்சரிக்கை

- S. மோகன்

# ரோபோக்களை கட்டுப்படுத்த புதிய தொழில்நுட்பம்

## இந்திய வம்சாவளி விஞ்ஞானி சாதனை



எண்ணங்களைக் கொண்டு ரோபோக்களை கட்டுப்படுத்தும் புதிய தொழில்நுட்பத்தை அமெரிக்காவில் வசிக்கும் இந்திய வம்சாவளி விஞ்ஞானி ஒருவர் கண்டறிந்துள்ளார். அமெரிக்காவின் வாஷிங்டனில் வசித்து வருபவர் கவுரவ் சர்மா. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இவர், அமெரிக்காவின் ஒஹியோ மாகாணத்திலுள்ள கொலம்பஸ் நகரில் பேட்டலி என்ற அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் மூத்த ஆராய்ச்சி விஞ்ஞானியாக பணியாற்றி வருகிறார். ரோபோக்கள் தொடர்பான ஆராய்ச்சியிலும் கவுரவ் ஈடுபட்டு வருகிறார். இந்நிலையில் அமெரிக்காவிலுள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி திட்ட ஏஜென்சி (டிஏஆர்பிஏ) வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:



எண்ணங்களின் மூலம் ரோபோக்களைக் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சியில் கவுரவ் சர்மா ஈடுபட்டு வந்தார். இவருடன் இணைந்து மொத்தம் 6 குழுக்கள் இந்த ஆராய்ச்சியை செய்து வந்தன. ஹெல்மட்டை தனது தலையில் பொருத்திக் கொண்டு தனது எண்ணங்களைக் கொண்டு போர்க்களத்தில் இருக்கும் ரோபோக்களை செயல்பட வைக்கும் புதிய தொழில்நுட்பத்தை கவுரவ் சர்மா தலைமையிலான குழு கண்டறிந்துள்ளது. 2 கோடி டாலர் ஒப்பந்தம் இந்த ஆராய்ச்சிக்காக அடுத்த 4 ஆண்டுகளுக்கு 2 கோடி அமெரிக்க டாலர்கள் ஒப்பந்தம் கவுரவ் சர்மா குழுவுக்குக் கிடைத்துள்ளது. அதாவது இந்தத் தொழில்நுட்பத்தைக் கொண்டு வேறு ஏதோ ஒரு பகுதியில் இருக்கும் ரோபோக்களை இயக்கவும், ஆளில்லாத வேவு வாகனங்களை இயக்கவும் முடியும். மேலும் குறிப்பிட்ட இடத்தில் வெடிகுண்டுகளை வீசுவதற்கு ரோபோக்களுக்கு கட்டளையிடவும் முடியும். இந்த ஆராய்ச்சிக்கு பிரெயின்ஸ்டார்ம்ஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி குறித்து கவுரவ் சர்மா கூறும்போது, "நான் பணியாற்றிய திட்டங்களிலேயே இந்த ஆராய்ச்சியானது மிகவும் உற்சாகத்தைத் தரக்கூடிய மற்றும் சவாலான திட்டமாக இருந்தது. பிரெயின்ஸ்டார்ம் திட்டம் மூலம் நாங்கள் மீண்டும் பொறியியல், இயற்பியல் எல்லைக்கு வந்துள்ளோம். இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறும்போது மனித இயந்திர தொடர்புகளை எளிதாக மாற்றுவதோடு அல்லாமல் ஒரு பாதுகாப்பான மற்றும் திறமையான வழியையும் வழங்க முடியும். நரம்பு மண்டல ஆய்வில் புரட்சியையும் ஏற்படுத்த முடியும்" என்றார்.

- D. ரவி



# சிந்தனை முத்துக்கள்



[*] தொடர்ச்சியாக 8 மாதங்கள் பறக்கும் பறவை எது? டெர்ன்
[*] பல துண்டுகள் வெட்டினாலும் உயிர் வாழும் உயிரினம்? மண்புழு
[*] கூடுகட்டி வாழும் ஒரே பாம்பு இனம் எது? ராஜ நாகம்
[*] வாழ்நாள் முழுவதும் நீர் அருந்தாத பாலூட்டிகள்? எலி, கங்காரு
[*] உலகில் எத்தனை வகை கொசுக்கள் உள்ளன? 48 வகைகள்
[*] பின்புறமாக மரத்தில் ஏறும் விலங்கு எது? கரடி
[*] யானைக்கு நுகரும் நரம்புகள் எங்கு அமைந்துள்ளது? வாய்
[*] குழந்தைகளுக்கு பாலூட்டும் ஒரே பறவை எது? சம்பாநட்
[*] நீர்யானைகள் அதிகம் காணப்படும் இடம் எது? ஆப்பிரிக்கா
[*] அதிக மொழிகள் பேசப்படும் நாடு? இந்தியா
[*] எந்த நாட்டில் பூனைக்கு கோவில் உள்ளது? எகிப்து
[*] உலகில் அதிகமாக பேசப்படும் மொழி எது? சீன மொழி
[*] தவளைக்கு ஒலியை உணரும் திறன் எதில் உள்ளது? கண்
[*] எலிகள் மூலம் பரவும் நோய் எது? பிளேக்
[*] மீன் எண்ணெயில் குணமாகும் முக்கிய நோய்? ரிக்கெட்ஸ்
[*] உணவை கழுவி சாப்பிடும் விலங்கு எது? ரக்கூன்
[*] ஒரு மரத்தை தன் பற்களால் முறிக்க வல்ல விலங்கு? பீவர்
[*] அடை காக்கும் ஆண் பறவை இனம் எது? பெங்குவின்
[*] உலகில் தோன்றிய முதல் உயிரினம் எது? அமீபா
[*] தலைகீழாக தொங்கும் பாலூட்டி எது? வௌவால்
[*] புலிகள் அதிகமாக காணப்படும் கண்டம் எது? ஆசியா
[*] கண்ணிலே காது உடைய பிராணி எது? பாம்பு




## பணம்

பணத்தால் ஒரு வீட்டை வாங்கலாம்,
ஆனால் ஒரு இல்லத்தை வாங்க முடியாது

பணத்தால் ஒரு கடிகாரத்தை வாங்கலாம்,
ஆனால் நேரத்தை வாங்க முடியாது

பணத்தால் ஒரு மெத்தையை வாங்கலாம்,
ஆனால் தூக்கத்தை வாங்க முடியாது

பணத்தால் ஒரு காப்பீட்டை வாங்கலாம்,
ஆனால் பாதுகாப்பை வாங்க முடியாது

பணத்தால் சாப்பாட்டை வாங்கலாம்,
ஆனால் பசியார்வதை வாங்க முடியாது

பணத்தால் ஒரு புத்தகத்தை வாங்கலாம்,
ஆனால் அறிவை வாங்க முடியாது

பணத்தால் மருந்தை வாங்கலாம்,
ஆனால் சுகத்தை வாங்க முடியாது.















**கடவுள் உங்களை பிரச்சனையின் விளிம்பு வரை தள்ளும் போது நம்பிக்கையோடு இருங்கள். இரண்டில் ஒன்று நடக்கும்...**

**ஒன்று விழாமல் தாங்குவார்! இல்லையெனில் பறக்க சொல்லித்தருவார்!**








நாடோடி

நாளைய வாழ்க்கைகாக
இன்றைய கனவுகளை துறந்து
கடமைகளை நிறைவேற்ற
உணர்வுகளை மறைத்து
பொம்மைகளாய் ஓடும்
ஒவ்வொரு ஆணும்
நாடோடியே!!!






செல்போன் பயன்படுத்த ஆரம்பித்தபின் நிம்மதியாய் மழையில் நனையக்கூட முடிவதில்லை.







**நேர்மையாக இருந்து எதை சாதித்து விட்டாய்? என்று கேட்பவர்களிடம் தைரியமாக சொல்லுங்கல் நேர்மையாக இருப்பதே பெரிய சாதனைதான் என்று!**

# பிறப்பின் உண்மையான பயன்

பல ஆண்டுகள் தவம் புரிந்த பிறகு, பிரம்மா நேரில் தோன்றி அவன் கோரிய வரத்தைக் கொடுத்தார். முனிவர் கோபத்துடன் அவனைப் பார்த்து, 'சாம்பலாகப் போவாய்!' என்றவுடன் அவன் எரிந்து சாம்பலாகிப் போனான். இவ்வாறு புராணக் கதைகளில் படிக்கிறோம். என்ன பொருள் இதற்கு? ஒருவரை ஒருவர் இப்படிச் சபிக்க முடியுமா? இந்திரன் கௌதமரின் உருவில் வந்து அகலிகையுடன் நெருக்கமாக இருந்த காரணத்தினால் அவள் கல்லாகப் போகட்டும் என்று கௌதமர் சாபம் கொடுத்தார். பல்லாண்டுகள் கல்லாக இருந்த அகலிகை பிறகு ராமபிரானின் பாதம் பட்டுச் சுய உருவை அடைந்தாள் என்று ராமாயணத்தில் படித்திருக்கிறோம். 'முனிவர் சாபம் கொடுத்ததால் அவருடைய தவவலிமை குறைந்து போயிற்று,' என்றும் படிக்கிறோம்.

தவவலிமை என்று உண்மையில் ஏதேனும் இருக்கிறதா? விஞ்ஞான வளர்ச்சி இந்த அளவுக்கு ஏற்பட்ட பின்னரும் இதையெல்லாம் நம்புவதற்கு இடமிருக்கிறதா? பிரபஞ்சம் பொருளால் ஆனது இந்த விஷயங்களைப் புரிந்து கொள்வதற்கு சில அடிப்படையான உண்மைகளைப் புரிந்துகொண்டாக வேண்டும். பொதுவாக விஞ்ஞானம் பிரபஞ்சம் பொருளால் ஆனது என்று நம்புகிறது. அந்த அடிப்படையில்தான் அதன் ஆராய்ச்சிகள் அனைத்தும் நிகழ்கின்றன. ஆனால் பொருள் என்பது என்ன என்று விஞ்ஞானம் இன்னும் கண்டுபிக்கவில்லை. பொருளும் சக்தியும் அடிப்படையில் ஒன்றுதான் என்று மட்டும் அது கண்டுபிடித்திருக்கிறது. பொருளும் சக்தியுமாக வியாபித்திருப்பது எது என்று இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

வெகு சில விஞ்ஞானிகள் புதிய திசையில் பயணம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். புதிய உண்மைகளை அவர்கள் கண்டறிந்து சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் பொதுவாகப் பல விஞ்ஞானிகள் இன்னும் பழைய நம்பிக்கைகளின் அடிப்படையில்தான் பார்த்துக்கொண்டும் சிந்தித்துக்கொண்டும் இருக்கிறார்கள். பிரபஞ்சம் பொருளால் ஆனதா, பிரக்ஞையால் ஆனதா? விஞ்ஞானம் அறிவையும் சிந்தனையையும் மட்டுமே அறுதியான உபகரணங்களாக எடுத்துக் கொண்டிருக்கிறது. பொதுமனம் விஞ்ஞானம் சொல்வதை அப்படியே நம்பிவிடுகிறது. மேற்கத்திய உலகம் புறவயமாக இந்தப் பிரபஞ்சத்தை ஆராய்ந்து கொண்டிருந்த நேரத்தில், நம் ரிஷிகள் அகவயமாக ஆராய்ந்து பெரும் உண்மைகளை அறிந்துகொண்டனர். அந்தப் பெரும் உண்மைகளைச் சுய பரிசீலனையோ



புரிதலோ இல்லாமல் வெறும் நம்பிக்கையாகப் பலர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மற்றொரு சாரார் அவற்றை அர்த்தமற்ற மூடநம்பிக்கையென்று ஒதுக்கிவிடுகிறார்கள். ஆனால் வெகுசில விஞ்ஞானிகள் பொதுவிஞ்ஞானத்தின் எல்லைக் கோடுகளை மீறிப் பார்த்திருக் கிறார்கள்.



ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ் என்னும் நோபல் பரிசு பெற்ற இயற்பியல் விஞ்ஞானி (Phycisist), *1925*ம் ஆண்டு வாக்கில், புதிய விஞ்ஞானம் கண்டுபிடித்திருக்கும் விஷயங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது இந்தப் பிரபஞ்சம் ஒரு மாபெரும் மனத்தில் இருக்கக்கூடிய எண்ணத்தைப்போல் இருக்கிறது, என்று சொல்லியிருக்கிறார்! பிரக்ஞை கொண்ட சக்தி இதுதான் கிட்டத்தட்ட நம் ரிஷிகள் கண்டுபிடித்துச் சொன்னதற்கு மிகவும் நெருக்கத்தில் வருகிறது. 'பிரபஞ்சம் பிரக்ஞையால் ஆனது. பிரக்ஞை என்பது பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருக்கும் சக்தி. இந்தச் சக்திதான் பிரபஞ்சத்தை உருவாக்கியது; ஒவ்வொரு கணமும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இந்தச் சக்தி, சுயப்பிரக்ஞை உள்ளது.

பிரபஞ்சம் மறைந்து போனா லும் இந்தச் சக்தி மட்டும் தொடர்ந்து காலமற்று எப்போதும் இருந்து கொண்டிருக்கும்,' என்றார்கள் ரிஷிகள். ரிஷிகள் தவத்தில் இருக்கும்போது இந்த அடிப்படைச் சக்தி அவர்களுக்குள் சேருகிறது. இந்தச் சக்தி ஆக்குவது மட்டுமில்லாது அழிக்கவும் கூடியது. இதனால்தான் வேண்டும் வரங்களையோ, வேண்டாத சாபங்களையோ அவர்களால் தர முடிகிறது. அவர்களுடைய சங்கல்பம் (intention) பிரபஞ்ச சக்தியின் சங்கல்பத்துக்கு, நோக்கத்துக்கு, இசைவாக இயங்கும்போது அவர்களுடைய சக்தி குறைவதில்லை. ஆனால் பிரபஞ்ச சங்கல்பத்துக்கு மாறாக அவர்களுடைய சங்கல்பம் செயல்படும்போது அதாவது சாபம் கொடுக்கும்போது அவர்களுடைய சக்தி குறைந்துவிடுகிறது. எது கேட்கிறது? பிரபஞ்ச சிருஷ்டி இந்தச் சக்தியின் இயக்கமேயாதலால் அவர்கள் நினைப்பது நிச்சயமாக நிறைவேறும். இந்தக் காரணத்தால்தான் பெரும் ஞானிகளிடம் நம் குறைகளைச் சொல்லும்போது அவை நீங்கி, நம் பிரச்னைகளுக்குத் தீர்வு ஏற்படுகிறது. ஆனால், அவர்கள் தாங்கள் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். இது ஒருவிதத்தில் உண்மைதான். ஏனென்றால், அவர்கள் வலிந்து எதுவும் செய்வதில்லை. நாம் சொல்லும் குறை களைக் கேட்கும்போது அவர்கள் தம் தனிமனத்திலிருந்து கேட்பதில்லை. பிரபஞ்சப் பிரக்ஞை தான் அதைக் கேட்கிறது.

அதனால் அந்தக் குறை தீர்ந்து நன்மை விளைகிறது. இந்த விஷயத்தில் ஞானிகள் பிரபஞ்ச சக்தி இயங்குவதற்கு ஒரு சாதனமாக மட்டுமே இருக்கிறார்கள். இந்தச் சக்தி நமக்குள்ளும் நிறைந்திருந்து இயங்கிக் கொண்டிருப்பதால், நாமே நம் குறைகளைத் தீர்த்துக்கொள்ளவும் முடியும். ஆனால், நம் தனிப் பிரக்ஞை, பிரபஞ்சப் பிரக்ஞையோடு இசைந்து இயங்கினால்தான் இது நடக்க முடியும். சங்கல்பம் என்பது வெறும் சடங்கோ, அல்லது மனம் சார்ந்த விஷயமோ அல்ல. மிகவும் ஆக்கப்பூர்வமானதொரு இயக்கம் அது. முழு மனத்தோடு நாம் என்ன நினைத்தாலும் அந்தக் கணத்திலேயே அது நடப்பதற்கான இயக்கம் தொடங்கிவிடுகிறது. இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் நம்மால் எந்த ஒரு விஷயத்தையும் முழுமனதோடு நினைக்க முடிவதில்லை என்பதுதான். ஒன்றை நினைக்கும்போதே அதற்கு நேர்மாறான வேறொரு விஷயத்தையும் நம் மனம் நினைத்துவிடுகிறது! சற்று நேரம் நம் மனம் இயங்கு வதை நாம் கவனித்துப் பார்க்க முடிந்தால், இது வெளிப்படையாகத் தெரிந்துவிடும். இப்படிக் கவனித்துப் பார்ப்பதற்குக் கடினமான பயிற்சி தேவை. மிகுந்த சக்தியும் தேவை.

ஆனால் நம்முடைய சக்தியின் பெரும்பகுதி ஒவ்வொரு கணமும் பொறாமை, கோபம், ஆற்றாமை, ஏக்கம், பகைமை உணர்வு, ஆசை, பயம், வன்முறை, அகச்சிக்கல் என்று பலவிதமாக விரயம் ஆகிக் கொண்டிருக்கிறது. அகச் சக்தி வளர்ந்து பெருகுவதற்கு தியானம் மிகவும் அவசியம். தியானம் என்பது நாம் செய்யவேண்டிய ஒரு விஷயம் அல்ல. ஒன்றும் செய்யாமல் உள்ளே கவனத்துடன் இருக்க நாம் பயிலவேண்டிய ஒரு விஷயம் அது. அப்படி இருக்கும்போது ஆக்க சக்தி தானாக உள்ளே பெருகுகிறது. அப்படிப் பெருகும் சக்தியை நாம் சுயக்காரணங்களுக்குப் பயன் படுத்தாமல் இருந்தால் ஒரு நிலையில் பிரபஞ்ச சங்கல்பம் நம் வழியாக நடக்கத் தொடங்கிவிடும். அதுதான் நம் பிறப்பின் உண்மையான பயன்.

**- A.D. ராஜேந்திரன்**

முனைவர் ஆ.மவுரியன்





வீர தமிழச்சிகளின் வரலாறு..!

(20)

# ஈ.வெ.ரா. நாகம்மையார்

**தமது சுகவாழ்வைத் துறந்தார். விலையுயர்ந்த நகைகளைத் துறந்தார். மெல்லிய பட்டாடைகளை வெறுத்தார். முரட்டுக் கதராடை உடுத்தினார்**

**நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா? ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா? இன்பம் போயிற் றென்று சொல்லட்டுமா? உணர்ச்சி போயிற்றென்று சொல்லட்டுமா? ஊக்கம் போயிற்றென்று சொல்லட் டுமா? எல்லாம் போயிற்றென்று சொல்லட்டுமா? எதுவும் விளங்கவில்லையே!**

*எது எப்படி இருந்தபோதிலும் நாகம்மாள் மறைவு ஒர் அதிசய காரியமல்ல. நாகம்மாள் இயற்கை யெய்தினாள். இதிலொன்றும் அதிசயம் இல்லை. நாகம்மாளை அற்ப ஆயுள்காரியென்று யாரும் சொல்லிவிட முடியாது. நாகம்மாளுக்கு 48 வயதே ஆனபோதிலும் அது மனித ஆயுளில் பகுதிக்கே சிறிது குறையான போதிலும் இந்திய மக்களில் சராசரி வாழ்நாளாகிய இருபத்தி மூன்றரை வயதுக்கு இரட்டிப்பென்றே சொல்லவேண்டும். செத்தால் சிரிக்க வேண்டும், பிறந்தால் அழ வேண்டும் என்கின்ற ஞானமொழிப்படி, நாகம்மாள் செத்ததை ஒரு துக்க சம்பவமாகவும் ஒரு நஷ்ட சம்பவமாகவும் கருதாமல் அதை ஒரு மகிழ்ச்சியாகவும் லாபமாகவும் கருத வேண்டு மென்றே நான் ஆசைப்படுகின்றேன். ஆசைப்படுவது மாத்திரமல்லாமல் அதை உண்மையென்றும் கருதுகிறேன்.*

*எப்படியெனில், எனது வாழ்நாள் சரித்திரத்தில் இனி நிகழப்போகும் அத்தியாயங்களோ சிறிது விசேஷ சம்பவங்களாக இருந்தாலும் இருக்கலாம். அதை நாகம்மாள் இருந்து பார்க்க நேரிட்டால் அந்த அம்மாளுக்கு அவை மிகுந்த துக்கமாகவும் துயரமாகவும் காணக்கூடியதாய் இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகம் இருக்காது. அத்துடன் அதைக் கண்டு சகியாத முறையில் நானும் சிறிது கலங்கக்கூடும். ஆதலால் நாகம்மாள் மறைவால் எனக்கு அதிக சுதந்திரம் ஏற்பட்டதுடன் குடும்பத்தொல்லை ஒழித்தது என்கின்ற உயர்பதவியையும் அடைய இடமேற்பட்டது.*

*இது நிற்க, நாகம்மாள் மறைவை நான் எவ்வளவு மகிழ்ச்சியான காரியத்திற்கும், லாபமான காரியத்துக்கும் பயன்படுத்தி கொள்கின்றேனோ அந்த மாதிரி எனது மறைவையோ, எனது நலிவையோ நாகம்மாள் உபயோகப்படுத்தி கொள்ளமாட்டாள். அதற்கு நேரெதிரிடையாக்குவதற்கே உபயோகித்து கொள்வாள். ஆதலால் நாகம்மாள் நலத்தைக் கோரியும் நாகம்மாள் எனக்குமுன் மறைந்தது எவ்வளவோ நன்மை.*

*என்னருமைத் தோழர்கள் பலருக்கு நாகம்மாள் மறைவு ஈடுசெய்யமுடியாத நஷ்டமென்று தோன்றலாம். அது சரியான அபிப்பிராயம் அல்ல.*

அவர்கள் சற்று பொறுமையாய் இருந்து இனி நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளைக் காண்பார்கள். ஆனால் அவர்களும் என்னைப்போலவே நாகம்மாள் மறைவு நலமென்றே கருதுவார்கள். நாகம்மாளுக்கு காயலா ஏற்பட்ட காரணமே எனது மேல்நாட்டு சுற்றுப்பிரயாணம் காரணமாய் ஒரு வருஷகாலம் பிரிந்து இருந்திருக்க நேர்ந்த பிரிவாற்றாமையே முக்கிய காரணம். இரண்டாவது, ரஷ்ய யாத்திரையினால் எனக்கு ஏதோ பெரிய ஆபத்து வருமென்று கருதியது.

தோழர் ஈ.வெ.ரா.நாகம்மாள் அவர்கள் 11-ந் தேதி மாலை 4 மணிக்கு இனிதாங்காது என்ற நிலையில் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அழைத்து வரப்பட்டார். வந்ததும் கடைசி ஸ்திதியில் செய்யக்கூடிய சிகிச்சைகளை செய்து பார்த்ததும் இரவு 7-45 மணிக்கு அம்மையார் ஆவி நீத்தார்கள். உடனே அம்மையாரின் உடல் சுத்தம் செய்யப்பட்டு நன்கு அலங்கரித்து ஈ.வெ.ரா. அவர்கள் இல்லத்தின் முன் மண்டபத்தில் யாவரும்



எளிதில் பார்த்துச்செல்ல வசதியுடன் அழகிய பெட்டியில் அடக்கம் செய்து வைக்கப்பட்டது. உடனே 8-30 மணிக்கு யாவருக்கும் (ஈ.வெ.ரா. உள்பட) சாப்பாடு நடந்தது. ஊர் பிரமுகர்களும், வெளியூர் தோழர்களும் இரவு முழுவதும் வந்து கொண்டே இருந்தார்கள். அநேகமாக எல்லோரும் இரவு முழுவதும் விழித்துக்கொண்டே கேளிக்கையாய் இருந்ததோடு இடைஇடையே டீ வழங்கப்பட்டு வந்தது. முக்கியமாய் யாவரும் கவனிக்க வேண்டியதும், கவனித்ததுமான சம்பவம் யாதெனில் நெருங்கிய உறவினர் முதல் உற்ற தோழர்கள் வரை யாவரும் அழுதல் என்னும் அநாகரிகமான காரியத்தை அறவே ஒழித்து ஆண் பெண் அடங்கலும் ஒற்றுமையாய் பேசிக்கொண்டும் நாளைய காரியங்கள் கவனித்தும் வந்ததே.

மறுநாள் காலை 9 மணி அளவிற்கு தகனத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று இரவே துண்டுப் பிரசுரம் ஊரெல்லாம் வழங்கப்பட்டது. அந்தப்படிக்கே மறுநாள் காலையில் எவ்வித சடங்கும் இல்லாமல் ஒரு இரதத்திற்கு ஒப்பான ஒர் அழகிய நாலு சக்கரவண்டியில் அம்மாளின் உடல் மூடப்பட்ட பெட்டி வைக்கப்பட்டு பெட்டியை பட்டாடைகளாலும், புஷ்பங்களாலும், அலங்கரித்து வைத்து பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் பின்தொடர தகனம் செய்ய குறிப்பிட்டிருந்த இடத்தை நோக்கி வண்டி மெல்ல தள்ளிக்கொண்டு செல்லப்பட்டது. ஊர்வல ஆரம்பத்தில் போட்டோ படக்காரர்கள் பலர் படம் எடுத்தார்கள். வழிநெடுக அநேக கடைகளிலும், முக்கியமாய் சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் முன்னிலும் நிறுத்தி நிறுத்தி மாலைகள் போடப்பட்டு புஷ்பங்கள் வாரி வாரி இறைக்கப்பட்டன. தகனம் நடக்கும் இடமாகிய காவேரிக்கரை அணுகியதும் உடனே தகன ஏற்பாடுகள் நடந்து

கொண்டேயிருக்கும் போது தோழர் எஸ். மீனாட்சிசுந்தரம் பி.ஏ., எல்.டி., அவர்கள் தலைமையில் ஒர் கூட்டம் கூடி வந்திருந்த பிரமுகர்களும், இயக்க தோழர்களும் தங்கள் அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டதுடன் தோழர்கள் சாமி சிதம்பரனார், ராவணதாஸ், சேலம் நடேசன், டாக்டர் கிருஷ்ணசாமி, மாயவரம் சி. நடராஜன், ஈ.வி.நஞ்சப்ப செட்டியார், எம்.சிக்கையா, மைதீன் பாட்சா முதலியவர்கள் அம்மையாரின் குணாதிசயங்களைப் பற்றியும், வரலாற்றைப் பற்றியும் பேசினார்கள். பின் தோழர் ஈ.வெ.ரா அவர்கள் பதில் சொல்லி முடித்தவுடன் கூட்டம் முடிந்து எல்லோரும் வீடு திரும்பினார்கள். வெளியூர் பிரமுகர்கள் வந்துகொண்டே இருப்பதுடன், தந்திகளும், கடிதங்களும் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. ஒரு மணி நேரத்தில் எல்லாம் முடிந்தது. தகனம் செய்த பின்பு எவ்வித சடங்கும் அது சம்பந்தமான நடவடிக்கையும் இல்லை. ஈ.வெ.ரா. சனிக்கிழமை இரவு சுற்றுப்பிரயாணம் செய்வதற்குத் திருச்சிக்குப் புறப்பட்டுவிட்டார்.

**- தொடரும்**



# அரசு மருத்துவமனைகளில் மருந்து, மாத்திரைகள், குளுக்கோஸுக்கு தட்டுப்பாடு

தமிழக அரசு மருத்துவமனைகளில் 33 வகை மருந்து, மாத்திரைகள், குளுக்கோஸுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அவற்றை வெளியே வாங்கிக் கொள்ள மருத்துவமனை நிர்வாகங்களுக்கு தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் உத்தரவிட்டுள்ளது. இதனால், மருத்துவ மேம்பாட்டுக்காக கிடைக்கும் மருத்துவக் காப்பீட்டு திட்ட நிதி, மருந்துமாத்திரைகளுக்காக கோடிக்கணக்கில் விரயமாகி வருகிறது.

தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், தாலுகா மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள்மற்றும் இஎஸ்ஐ மருத்துவமனைகளுக்குத் தேவையான, மருந்து, மாத்திரைகளை, தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மொத்தமாக கொள்முதல் செய்து அனுப்பி வைக்கிறது. கடந்த பிப்ரவரி முதல் அரசு மருத்துவமனைகளில் மருந்து, மாத்திரைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படத் தொடங்கியது. ஆனால், இதை சரிசெய்ய தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை.

அதனால், தற்போது மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் மட்டுமல்லாது அனைத்து அரசுமருத்துவமனைகளிலும் நோய்கிருமிகளை அழிக்கும் உயிர்க்கொல்லி மருந்துகள் (ஆன்டிபயாடிக்), இதய நோய், சர்க்கரை நோய், மனநல சிகிச்சை, சில புற்றுநோய் மருந்துகள் மற்றும் மயக்கவியல் மருத்துவம் உள்ளிட்ட அனைத்து மருத்துவத் துறைகளுக்கான 33 வகை மருந்து, மாத்திரைகளுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளுக்கான அனைத்து வகை குளுக்கோஸ் பாட்டில்கள் நாளொன்றுக்கு 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் பாட்டில்கள் தேவைப்படுகின்றன.

தற்போது இந்த குளுக்கோஸ் பாட்டில்களுக்கே தட்டுப்பாடு நிலவுகிறது. அதனால், தமிழ்நாடு மருத்துவசேவைக் கழகம், அனைத்து மருத்துவக் கல்லூரி டீன்கள், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்துறை இணை இயக்குநர்கள், சுகாதாரத் துறை துணை

இயக்குநர்களுக்கு, தட்டுப்பாடுள்ள இந்த 33 வகை மருந்து, மாத்திரைகளை வெளியே வாங்கிக்கொள்ளும்படி உத்தரவிட்டுள்ளது. இந்த மருந்துகளை வெளியே வாங்குவதற்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்ட நிதியில் இருந்து செலவிடப்படுவதால் மருத்துவமனை நிர்வாகங்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து அரசு மருத்துவர்கள் கூறும்போது, "ஒவ்வொரு ஆண்டும் அரசு மருத்துவமனைகளில் 10 முதல் 15 சதவீத நோயாளிகள் வரை அதிகரித்து வருகின்றனர். அதற்கேற்ப ஒப்பந்தப்புள்ளி கோரிக்கையில் மருந்து, மாத்திரைகள் எண்ணிக்கையும் அதிகப்படுத்தி இருக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்குவதால் வெளி சந்தைவிலையைவிட 30 முதல் 40 சதவீதம் வரை குறைத்து வாங்கலாம். ஒவ்வொரு மருத்துவமனைக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 25 சதவீதம் நிதிமருத்துவமனை மேம்பாட்டுக்குக் கிடைக்கிறது. ஆனால், இந்நிதிதற்போது மருத்துவமனை மேம்பாட்டுக்குப் பயன்படுத்தாமல் மருந்து, மாத்திரைகள் வாங்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சென்ற ஆண்டு மட்டும்அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் ரூ.150 கோடிக்கு மேலாக மருத்துவக் காப்பீட்டு நிதி கிடைத்துள்ளது. இதில், மதுரை அரசு மருத்துவமனைக்கு மட்டும் ரூ.7 கோடி வரை கிடைத்துள்ளது. தற்போது இந்நிதியில் 60 சதவீதத்துக்கும் மேல் மருந்து மாத்திரைகள் வாங்குவதால் மருத்துவமனை நிர்வாகம் நவீனமருத்துவ உபகரணங்கள் வாங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.



மருத்துவ சேவைக் கழகம் ஒப்பந்தப்புள்ளி கோரும்போது நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் மருந்து கொள்முதலை அதிகப்படுத்தி வாங்கவேண்டும். தனியார் மருத்துவமனைகளில் மருந்து, மாத்திரைகள் இருப்பு விகிதம் டிஜிட்டல் முறையில் கையாளப்படுகிறது. அந்தமுறையை அரசு மருத்துவமனைகளிலும் பின்பற்ற வேண்டும்" என்றனர்.

**- V. அருணாச்சலம்**

# நடந்தது தேர்தலா?

- கவிஞர் **நிவேதிதா**

அரசியல் தேரங்கு
அச்சாணி கழண்டுகிடக்கிறது
தேர்தல் காலத்தோடுமட்டும்
அரசியல் சாசனங்கள்

நேர்மை எமக்குண்டு
நலங்கள் காத்திடுவோம்
நாளுந்தோறும் உமக்காக
எம்வாழ்க்கை சமர்ப்பணமென
இலவச வாக்குறுதிகள் மட்டும்

ஒவ்வொரு வாக்குகளுக்கும்
இவ்வளவுதான் விலையென
அற்ப பெருள்கொடுத்து
அடகுபிடிக்கும் தரகர்கள்

ஏமாந்த கோமாளிகளாய்
கவர்ச்சிப் பொம்மைகளுக்கு
எதிர்காலத்தை சூனியமாக்கி
விலைபோகும் அரசியல் பாமரர்கள்


நடிகர் கூட்டங்களின்
நாடக அரங்கேற்றங்கள்
அரசியலிலும் கதை வசனங்களால்
கற்பனைகளாகும் மக்களின்
எதிர்பார்ப்புகள்

எல்லேரும் அவர்களாகிட
எவர்தான் நேர்மையாளன்? எனும்
கேள்வியோடு
அமைதியிலும் அர்த்தமற்று
அவதியுறும் சமூகங்கள்

நேர்மை அரசியலொன்றுக்காய்
சிந்தித்திடாத இளைஞர்கூட்டங்கள்
ரசிகர் மன்றங்களோடு
நடைப்பிண மனிதங்கள்

சுயநலமற்ற சமத்துவத்துடன்
சுத்தமான சுதந்திரக்காற்றாய்
எதிர்கால இளசுகளுக்கு
வேண்டுமின்று அரசியலில் நேர்மை
காமராஜர் படம் போட்டு பாடம்
எடுத்தது போதும்
இனியாவது கர்மவீரரை போன்று
நேர்மையை காண விழைகிறது நாடும்...





# ஆய்வு செய்யுமா தமிழக அரசு?

# இயற்கையாக அமைந்துள்ள அணை

## சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை நிரப்பி தாராளமாக தண்ணீர் பெறலாம் என்கிறது ஆய்வு

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூரில் இருந்து வேலூர் மாவட்டம் காவேரிப் பாக்கம் வரை சுமார் 80 கிலோ மீட்டர் நீளத்துக்கு பூமிக்கடியில் இயற்கையாக அமைந்துள்ள அணை போன்ற அமைப்பில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை நிரப்பினால், சென்னை உள்ளிட்ட 3 மாவட்டங்களுக்கு தேவை யான குடிநீரும், விவசாயத்துக்கான தண்ணீரும் தாராளமாகக் கிடைக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழையும், வட கிழக்கு பருவமழையும் இயல்பை விட குறைவாகப் பெய்ததால், ஏரிகள், குளங்களில் தண்ணீர் இருப்பு மிகவும் குறைந்துவிட்டது. பல நீர்நிலைகள் வறண்டுவிட்டன. சென்னை உள்ளிட்ட 24 மாவட்டங் களை வறட்சி மாவட்டங்களாக அரசு அறிவித்துள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு ஏப்ரலில் திருவள்ளூர், திருச்சி, சேலம், விருதுநகர் உள்ளிட்ட 19 மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ளது என்று நீர் வளத் துறை தெரிவித்திருக்கிறது. புவிவெப்பமயமாதல் காரண மாக ஆண்டுதோறும் பருவமழை இயல்பான அளவு பெய்வதில்லை. இந்நிலையில் மழைநீர் சேகரிப்பு மட்டுமல்லாமல் மாற்று வழிகளிலும் தண்ணீரை சேமிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

மழைக் காலத்தில் வெள்ளம் பெருக்கெடுக்கும்போது தடுப்பணை யில் மழைநீரை சேகரிக்க வேண்டும். அதற்கு ஆங்காங்கே தடுப்பணை கள் கட்ட வேண்டும். ஏரி, குளங் களை தூர் வாரி கொள்ளளவை அதிகரிக்க வேண்டும் என்று நீரியல் வல்லுநர்கள் பல்வேறு யோசனைகள் கூறுகின்றனர். இருப்பினும், ஏரி, குளம், தடுப்பணை ஆகியவற்றில் தண்ணீரை சேமித்தாலும் அதை நீண்டகாலத்துக்கு தேக்கிவைத்து பயன்படுத்த



முடியாது. சில மாதங்களில் அதைப் பயன்படுத்தி யாக வேண்டும். இல்லாவிட்டால், தற்போதைய வெயிலுக்கு அது ஆவியாகிவிடும்.விவசாயத் தேவைகள்மாநிலம் முழுவதும் குறைந்து விட்ட நிலத்தடி நீரை நம்பி குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இதுபோன்ற நிலை வரலாம் என்று கருதி 1980-களிலேயே பல்வேறு ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அதில், ஒன்று தான் சென்னை அருகே பூமிக்கடி யில் இயற்கையாக நீண்ட கால்வாய் போல அமைந்துள்ள அணை. இந்த அணையில் கழிவுநீரை சுத்திகரித்து சேமித்தால் குடிநீருக்கு மட்டுமல்லா மல் விவசாயத்துக்கும் தாராளமாக தண்ணீர் கிடைக்கும் என்று கூறப்படு கிறது.

இந்த நடைமுறை 1970-ம் ஆண்டில் இருந்து அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுகுறித்து சென்னைக் குடிநீர் வாரிய முன்னாள் பொறியியல் இயக்குநர் எஸ்.சுந்தரமூர்த்தி கூறியதாவது: இஸ்ரேல் நாட்டில் கழிவுநீர் 100 சதவீதம் சுத்திகரிக்கப்பட்டு விவசாயத் துக்குப் பயன்படுத்தப்படுகிறது. அங்கு பாலைவனத்தில் செயற்கை ஏரியை உருவாக்கி, அதில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை சேமித்து வேளாண் பணி களுக்கு பயன்படுத்துகிறார்கள். அந்த தண்ணீரில் திராட்சையை அதிக அளவில் விளைவித்து, அதில் இருந்து தயாரிக் கப்படும்




ரபல ஒயின் மதுபானம் உலகம் முழுவதும் விற்கப்படுகிறது. இஸ்ரேல் போல சுத்திகரிக்கப் பட்ட கழிவுநீரில் தமிழ்நாட்டிலும் விவசாயம் செய்யப்படுகிறது.

திருச்சியில் உள்ள பெல் (பாரத மிகு மின் நிறுவனம்) தொழிற்சாலை குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு அதன் அருகே உள்ள பாசன வாய்க்காலில் விடப் படுகிறது. அந்தத் தண்ணீர், கடந்த 1970-ம் ஆண்டில் இருந்து வேளாண் பணிகளுக்காகப் பயன் படுத்தப்பட்டு வருகிறது. இதுபோல தமிழகம் முழுவதும் கழிவுநீரை சுத்திகரித்து விவசாயத்துக்குப் பயன்படுத்த முடியும். தமிழக அரசுக்கு பரிந்துரைசென்னையில் குடிநீர் தட்டுப் பாடு ஆண்டுதோறும் பெரும் பிரச்சி னையாக இருக்கிறது. இதை சமாளிக்க திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள விவசாயக் கிணறுகளில் இருந்து பெருமளவு தண்ணீர் எடுக்கப்படுகிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் வேதனைப்படுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் நிறுவனம், கொசஸ்தலை ஆறு, பாலாறு, ஆரணி ஆறு உள்ளிட்ட ஆறுகளை 6 ஆண்டுகள் ஆய்வு செய்து 1987-ம் ஆண்டு தமிழக அரசுக்கு பரிந்துரையாக ஓர் அறிக்கை அளித்தது. இந்த ஆய்வின்போது, திருவள் ளூர் மாவட்டம் மீஞ்சூர் அருகே கொசஸ்தலை ஆறு முகத்துவாரத்தில் இருந்து வேலூர் மாவட்டம் ராணிப் பேட்டையை ஒட்டிய காவேரிப்பாக்கம் வரை சுமார் 80 கிலோ மீட்டர் நீளத்துக்கு பூமிக்கடியில் இயற்கை யான நீண்ட கால்வாய் வடிவில் அணை அமைந்திருப்பது (Buried Channel) கண்டறியப்பட்டது.

நீர் ஆவியாக வாய்ப்பில்லை கொசஸ்தலை ஆறு முகத்துவாரத்தில் இருந்து குறுக்கு வெட்டு தோற்றத்தில் பார்த்தால், இந்த இயற்கையான அணை கடல்மட்டத்தில் இருந்து 40 அடி ஆழத்தில் அமைந்திருக்கிறது. கடல்மட்டத்தில் இருந்து கீழே 40 அடி வரை களிமண் இருக்கிறது. அதற்கு கீழே 20 அடி ஆழத்தில் மணல் உள்ளது. அதற்கும் கீழே களிமண்ணும், அதன் அடியில் பாறையும் இருக்கின்றன. இந்த அணைக்கு மேலும், கீழும் களிமண் இருப்பதால் நீர் ஆவியாகாது. பூமிக்கடியிலும் உறிஞ்சப்படாது. இந்த அணை, பொன்னேரி, பஞ்செட்டி, தாமரைப்பாக்கம், பூண்டி அணை, கேசவரம் வழியாக வேலூர் மாவட்டம் ராணிப்பேட்டையை ஒட்டி அமைந்துள்ள காவேரிப்பாக்கம் வரை செல்கிறது. இந்த அணை, உள்ளே செல்லச் செல்ல மணல் பகுதி அகன்றும் ஆழமாகவும் காணப்படுகிறது. இதனுள்ளே சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை செலுத்தி நிரப்பலாம்.

சென்னையில் தினமும் சராசரியாக 40 கோடி லிட்டர் கழிவுநீர் வெளியேறு கிறது. கொடுங்கையூர், நெசப்பாக்கம், கோயம்பேடு, பெருங்குடி ஆகிய 4 இடங்களில் சுத்திகரிக்கப்படும் கழிவு நீரை ஓரிடத்தில் சேகரித்து பக்கிங்ஹாம் கால்வாய் ஓரத்தில் குழாய் வழியாக மீஞ்சூர் முகத்துவாரத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். அங்கு 40 அடி ஆழத்துக்கு குழாய் அமைத்து அதன் வழியே சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை அணைக்குள் செலுத்த வேண்டும்.அவ்வாறு தினமும் செலுத்தி னால், அணை கொஞ்சம், கொஞ்சமாக நிரம்பும். அணை முழுவதுமாக நிரம்புவதற்கு 8 ஆண்டுகள் வரை ஆகும். அதையடுத்து நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக உயரும்.அணை நிரம்பிவிட்டால், சென்னை, திருவள்ளூர், வேலூர் ஆகிய மாவட்டங் களுக்கும், காஞ்சிபுரம் மாவட்டத்தின் ஒருபகுதிக்கும் தேவையான குடிநீரும், விவசாயத்துக்கான தண்ணீரும் தாராளமாகக் கிடைக்கும். தொலைநோக்குத் திட்டம்பூமிக்குள் 40 அடி ஆழத்தில் தேக்கப்படும் தண்ணீரை ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் மற்றும் விவசாயத் தேவைக்கு எடுத்துக் கொள்ளலாம். அதன்பிறகு இந்த 3 மாவட்டங்களில் தண்ணீர் தட்டுப் பாடு என்ற பேச்சுக்கே இடமிருக்காது. 32 ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ள இந்த தொலைநோக்குத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வர வேண்டியது அவசர அவசியம்.

**- வீர ஆறுமுகம்**

# கள்ளுக்கான தடையை நீக்க வேண்டும்

## செ.நல்லசாமி கோரிக்கை

உணவின் ஒரு பகுதியான கள்ளுக்கு விதித்திருக்கும் தடையை அகற்ற வேண்டும் என்று கள் இயக்கம் ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி கோரிக்கை வைத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: மதுவிலக்கும், மதுக் கொள்கையும் மாநில அரசின் அதிகார பட்டி யலில் உள்ளது. தமிழ்நாட்டில் அரசே முன்னின்று சீமைச்சாராயங்களை டாஸ்மாக் மூலமாக மக்களுக்கு விற்பனை செய்து வருகிறது. வெவ்வெறு பெயர்களை கொண்டிருக்கும் மதுக்க ளின் ஒரே மூலப்பொருள்கள் சர்க்கரை ஆலைக் கழிவு மொலாசிஸ் ஆகும். திராட்சையிலிருந்து பிராந்தியும், தானியங்களிலிருந்து விஸ்கியும், கரும்பு சாற்றிலிருந்து ரம்மும், உருளைக்கிழங்கி லிருந்து வோட்கவும் தயாரிக்கப்படுகிறது.



மதுவின் பெயர் மூலப்பொருள் ஆகும். தமிழ்நாட்டில் மொலாசிஸ் மூலப் பொருள் களைக் கொண்டு தயாரிக்கப்படும் தரக்கு றைவான மதுக்கள், வீட்டிற்கும் நாட்டிற்கும் கேடு எனச்சொல்லி அரசே வெவ்வேறு பெயர்களில் சந்தைப்படுத்தி வருகின்றது. அது



மக்களை, ஏமாற்றும் மக்கள் விரோத செயல் ஆகும். கொஞ்சம் கொஞ்சமாக கொல்லும் விஷத்தை அரசு மக்களுக்கு மதுஎன்ற பெயரில் விற்பனை செய்து வருகிறது என்ற குற்றச்சாட்டை கள் இயக்கம் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறது. இலங்கை மதுக்களில் பெரும்பாலானவை பனை, தென்னை பொருட்களை மூலப்பொருட்களாகக் கொண்டுள்ளன. இவை உள்நாட்டிலும், உலக அளவிலும் சந்தைப்படுத்தப்படுகிறது.

உலக அளவில் மதுவிலக்கு தோற்றுப் போயிருந்தாலும் ஒரு அரசின் இலக்கு மதுவிலக்கை நோக்கியே இருத்தல் வேண்டும். தமிழ்நாட்டில் மதுவிலக்கு கொண்டு வரப்படும் வரை டாஸ்மாக் விற்பனை மதுக்கள் அனைத்தும் பனை,தென்னை மூலப்பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்டு உள்நாட்டிலும் உலக அளவில் சந்தைப்படுத்தப்பட வேண்டும். உணவின் ஒரு பகுதியான கள்ளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை உடனடியாக அகற்றப்பட வேண்டும். இந்தக் கோரிக்கையையும் இதர 13 கோரிக்கை யையும் முன்நிறுத்தி சூலூர் தொகுதியில் கள்இயக்கம் சார்பில் வேட்பாளர்களை களம் இறக்கியுள்ளது. அவருக்கு விழும் ஒவ்வொரு வாக்கும் மதுக்கொள்கையினை மாற்றியமைக்கும். இவ்வாறு நல்லசாமி வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**- B. நாராயணசாமி**

# முகிலன் எங்கே?




தனக்காக வாழும் சராசரி மனிதர்களின் மத்தியில் மக்களுக்காக வாழும் மகத்தான மனிதனாக வாழ்ந்து காட்டி, வருங்கால இளை ஞர்களுக்கு வழிகாட்டியாக திகழும் சண்முகம் எனும் முகிலன் சமூக நீதிக்காகவும் நலனுக்காவும் போராடப் பிறந்த பொது மனிதன்.

அவரது கல்லூரி காலத்தில் விடுதியில் உணவு சரியில்லாமல் மாணவர்கள் வெளியில் செல்லாமல் வேதனைப்பட, அது கண்டு முகிலன் தனது முதல் போராட்டத்தை தொடங்குகிறார். ஆரம்பத்தில் அலட்சியம் காட்டிய விடுதி நிர்வாகம், முகிலனின் போராட்டம் கண்டு உணவு முதல் அனைத்து அடிப்படை வசதிகளையும் சரி செய்து தருகிறது. மாணவர்கள் சந்தோஷம் அடைய அதைக் கண்டு ஆனந்தம் அடைகிறார் முகிலன். பிறர்க்காக போராடுவதில் தான் எத்தனை ஆனந்தம் என்றெண்ணி இனி நம் வாழ்க்கையே மற்றவர்களுக்காக போராடத்தான் என முடிவெடுக்கிறார்.

*1983* ஈழம் போராட்டத்தில் தமிழர்கள் கொல்லப்படுவதை அறிந்து துடித்துப் போகிறார் முகிலன். பழநெடுமாறனுடன் இணைந்து, குரல் கொடுக்க ஆரம்பிக்கிறார். அவர் ஆரம்பித்த தியாகப் பயணத்தில் முகிலன் கலந்து கொண்டு முதன் முறையாக சிறைக்கு செல்கிறார். பழநெடுமாறனின் தமிழர் தேசிய இயக்கத்தில் மாநில பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார் முகிலன்.

முகிலன் என்கிற சண்முகம் பொதுப் பர்த்துறையில் எஞ் ஜினியராக பணிக்கு சேர்கிறார். வேலையே பொதுப் பணித் துறையில் என்பதால், முகிலன் சந்தோஷமாக பொது வாழ்க்கை, போராட்டம் என்றே அவர் இயங்கி வருகிறார்.



அரசுப் பணியில் பின்னிப் பிணைந்திருக்கும் லஞ்சம், ஊழல் இவற்றிற்கு எதிராக தன் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்கிறார் முகிலன். இதனால், தான் பணிபுரியும் அலுவலகத்தில் பல நெருக்கடிகளை சந்திக்கிறார். அவற்றிற்கெல்லாம் அச்சம் கொள்ளாமல் தொடர்ந்து சமூக நலனுக்காகவே போராடி வருகிறார் முகிலன்.

முகிலன், பூங்கொடி என்னும் பெண்ணை திருமணம் செய்து கொள்கிறார். வாழ்க்கை நல்ல முறையில் சென்று கொண்டிருக்கையில் முகிலனை பல சமயங்களில் சிலர் திடீரென தாக்கிவிட்டு தப்பிக்கின்றனர். இவற்றை கண்டு பூங்கொடி பயந்து போகிறார். பொது வாழ்க்கை வேண்டாம் என்று முகிலனிடம் சொல்ல, முகிலன் மனைவிக்கு பொது வாழ்க்கையின் அர்த்தத்தை புரியவைக்கிறார் பூங்கொடியும் புரிந்து கொண்டு, கணவருக்கு உதவ முன் வருகிறார். பொதுப் பணித்துறையில் அதிகாரிகளின் நெருக்கடி காரணமாகவும், பொது வாழ்க்கையில் போராடவும் வேலைதடையாகஇருப்பதால் அந்த எஞ்சினியர் வேலையை தூக்கிப் போடுகிறார். எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் மண்ணுக்கு மழையை

கொடுக்கும் மேகம்போல, நீங்கள் மக்களுக்காக போராடுகிறீர்கள். இனிமேல் உங்களுக்கு முகிலன் என்ற பெயர் நிலைக்கட்டும் என மனைவி சொல்ல, சண்முகம், நாடறிந்த முகிலன் ஆகிறார்.

ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பிறகு இலங்கை அகதிகள் மீது இந்திய அரசாங்கம் பலவித கட்டுப்பாடுகளை விதிக்க, அவற்றை எதிர்த்து குரல் கொடுக்கிறார் முகிலன். பலவித போராட்டங்களை அவர்களுக்காக நடத்துகிறார். முகிலன் மீது தேசதுரோக வழக்கு போடப்பட்டு 27 நாட்கள் சிறையில் அடைக்கப்படுகிறார். ஒரு கட்டத்தில் அரசியல் சார்ந்த கட்சிகள் பொது நல வாழ்க்கையில் மக்களுக்காக உண்மையாக போராடவில்லை என்பதை உணர்ந்து அவற்றிலிருந்து முகிலன் வெளியேறுகிறார்.

தனிமனிதனின் குரல், தவறு செய்பவர்களை தட்டிக்கேட்க உதவாது என்பதை மனைவி, முகிலனுக்கு புரிய வைக்கிறார். அடுத்தவனுக்கு கேட்கனும்னாலே சத்தமா சொல்ல வேண்டியிருக்கு. அரசாங்கத்துக்கு கேட்கனும்னா, ஒரு அமைப்பு மூலமாக ஆர்ப்பாட்டமாதான் சொல்லியாகனும் என முடிவு செய்து, தமிழ்நாடு சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயக்கம் ஒன்றை தொடங்குகிறார் முகிலன்.

இயற்கைக்கு கேடு விளைவிக்கும் சிப்காட்டுக்கு எதிராக போராட்டம் நடத்துகிறார். மதுபான கம்பெனிக்கு எதிராகவும் போராட்டம் நடத்துகிறார். இதனால் முகிலன் சில மர்ம மனிதர்களால் தாக்குதலுக்கு உள்ளாகிறார். அவற்றைக் கண்டு அஞ்சாமல் தனது அமைப்பில் உள்ள தோழர்கள் துணையுடன் சென்னிமலை



நொய்யல் ஆற்றில் சாயப்பட்டறை கம்பெனிகள் கழிவு நீரை கலப்பதால் ஆற்றுநீர், நஞ்சு கலந்த ரசாயன நீராக மாறுவதை அறிந்து, அவற்றிற்கு எதிராக போராடுகிறார் முகிலன். ஒரு முறை, ஒரு சிறுமி ஆற்றில் குளித்ததால் தீக்காயங்கள் ஏற்பட்டு இறக்க, முகிலன் வெகுண்டு எழுகிறார். போராட்டத்தை தீவிரப்படுத்தி பல சாயப்பட்டறை கம்பெனிகளை இழுத்து மூடச் செய்கிறார்.

பக்கத்தில் அமையவிருந்த பன்னாட்டு நிறுவனத்திற்கு எதிராகவும், பெருந்துறை பக்கத்தில் அமைய விருந்த குளிர்பான நிறுவனத்தையும் பெரும் போராட்டம் நடத்தி, அவற்றை மூட செய்கிறார் முகிலன்.

முகிலனின் சமூக அக்கறையைக் கண்டு அவருக்கு நாளுக்கு நாள் ஆதரவு எப்படி பெருகி வருகிறதோ அதைப்போலவே மறைமுக எதிர்ப்பும் பெருகிக் கொண்டே போகிறது.

**தொடரும்**

**- முனைவர் ஆ.மவுரியன்**

# ‘நம்ம சென்னை’ செயலியை
# புறக்கணிக்கும் மாநகராட்சி நிர்வாகம்

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ‘நம்ம சென்னை’ புகார் செயலியை மாநக ராட்சி நிர்வாகம் புறக்கணிப்ப தாக பொதுமக்கள் குற்றம்சாட்டு கின்றனர். ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பொதுமக்கள் புகார் தெரிவிக்கும் வண்ணம் ‘நம்ம சென்னை’ என்ற புதிய ஸ்மார்ட் கைபேசி செயலியை ரூ.10 லட்சம் செல வில் சென்னை மாநகராட்சி உருவாக்கியுள்ளது. அதன் சேவையை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கிவைத்தார்.

உடனடி தீர்வு இந்த செயலி மூலம் பெறப் படும் புகார்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரி களுக்கு உடனுக்குடன் அனுப்பப் பட்டு, அதன் மீது மேற்கொண்ட நடவடிக்கை விவரங்களை புகார் தாரருக்கு அந்த செயலி மூல மாகவே உடனுக்குடன் தெரிவிக் கும் வகையில் வசதி ஏற்படுத் தப்பட்டுள்ளது. இதனால் பொது மக்களின் குறைகள் எவ்வித காலதாமதமும் இல்லாமல் உடனடியாக தீர்வு காணப்படும் என்று மாநகராட்சி நிர்வாகம் கூறி வருகிறது.




இந்த செயலியில் சொத்து வரி, தொழில் வரி செலுத்தும் வசதி, பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்வது, பிறப்பு சான்றிதழில் குழந்தையின் பெயரை சேர்க்கும் வசதி உள் ளிட்ட சேவைகளும் கிடைக்கின்றன.சென்னையில் 74 லட்சம் பேருக்கு மேல் வசிக்கும் நிலை யில், சுமார் 50 ஆயிரம் பேர் மட்டுமே இந்த செயலியை பதிவிறக்கம் செய்துள்ளனர்.அதிகாரிகள் மிரட்டல்புகார் செய்யும் முறை தமிழில் இல்லாதது, புகார் செய்வோரை அதிகாரிகள் மிரட்டுவது, செய லியில் புகார் செய்தால், அந்த விவரம் தலைமையிடத்துக்கு தெரிந்துவிடும் என்பதால் வார்டு பணியாளர்களிடம் மட்டுமே புகார் தெரிவிக்க வேண்டும்என்று புகார்தாரரிடம் அலுவலர்கள் அறி வுறுத்துவது, புகார் மீது தீர்வு காணாமல் அதை முடித்து வைப்பது, கொசுத்தொல்லை என்று புகார் தெரிவித்தால் புகை பரப்புவதை மட்டுமே செய்வது போன்ற காரணங்களால், பொது மக்கள் ‘நம்ம சென்னை’ செய லியில் புகார் தெரிவிப்பது குறைந் துள்ளது. மாநகரப் பகுதிகளில் நிலவும் குறைபாடுகளை கண்டறிய தலைமையிடத்து அதிகாரிகளைக் கொண்ட கண்காணிப்பு குழு ஒன்று மாநகராட்சி ஆணையர் தலைமை யில் இயங்கி வருகிறது.

இக்குழுதங்களுக்கு ஒதுக்கப்பட்ட மண்டலங்களில் உள்ள, மாநக ராட்சியின் கவனத்துக்கு வராத குறைகள் குறித்து படத்துடன், உரிய விளக்கத்தை சேர்த்து மாநகராட்சி ஆணையருக்கு மின் னஞ்சலில் அனுப்பி வருகின்றனர்.புகார்கள் எளிதாக மாநக ராட்சியின் கவனத்துக்கு வருவ தற்காகத்தான் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ‘நம்ம சென்னை’ புகார் செயலி உருவாக்கப்பட் டுள்ளது. இந்நிலையில், அந்த செயலியில் கண்காணிப்பு அலு வலர்கள் புகார்களை தெரிவிக் காமல், மின்னஞ்சலில் அனுப்பும் நடைமுறையை பின்பற்றுவது, அமைச்சர் தொடங்கிவைத்த திட்டத்தை புறக்கணிக்கும் விதமாக உள்ளது என்று பொதுமக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். அதிகாரிகள் விளக்கம்இதுதொடர்பாக மாநகராட்சி அதிகாரிகளிடம் கேட்டபோது, செயலியில் அதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

- M. தரணி

# ஒன்றுபட்டு வலிமை சேர்ப்போம்...

- மக்கள் விசாரணை
- அரசியல் தீர்ப்பு
- அருணை முரசு (ARUNAI MURASU)
- பீப்பிள் டுடே (PEOPLE TODAY)
- நமது நகரம்
- அரசியல் முத்திரை
- பேனா முள்
- திரை தீபம்
- அதிரடி குரல்
- கடல்சிற்பி (KADAL CHIRPI)
- தொழில் செய்தி
- சட்ட கேடயம்
- விழா முரசு
- ரிப்போர்ட்டர் வோர்ல்ட்
- அதிரடி தீர்ப்பு
- புரசை எக்ஸ்பிரஸ்
- சிலந்தி வலை (SILANTHIVALAI)
- மண்ணின் குரல்
- அமுதம் ரிப்போர்ட்டர்
- நுண்ணறிவு
- வெற்றி யுகம் (POLITICAL & CRIME MONTHLY)
- KŠ«õ£"ti" Mûj
- திங்கள் மலர் (ENLIGHT THE PEOPLE)
- நாற்காலி செய்தி
- போலீஸ் ரிப்போர்ட்டர்
- உரிமை ரிப்போர்ட்டர் (URIMAI REPORTER)
- கடல் துளிகள்
- பாக்கியம் சினிமா (BAKKIYAM CINEMA)
- தமிழன் குரல்
- PRESS
- மக்கள் பார்வை
- பார்வை
- மக்கள் விருப்பம் (MAKKAL VIRUPPAM)
- சேது நியூஸ்
- THE DECEMBER MAIL
- தொகுதி முரசு (THOGUTHI MURASU)
- மூன்றாம் கண்
- உள்ளாட்சி சுடர்
- முள்ளும் மலரும்
- INDIA NEWS
- FACE NEWS
- செய்திகள் (CHENNAI SEITHIGAL)
- பல்லவன் முரசு
- நியூஸ் பிரிட்ஜ் (NEWS BRIDGE)
- ஜித்தன்
- விழிப்புணர்வின் குரல்
- மெய் எழுத்து
- தர்ம ராஜ்ஜியம்
- FINE TIME (English & Tamil Weekly)
- புதுவை ஒளி
- வீரத்தலைமுறை
- PEOPLE PLUS (English & Tamil Weekly)
- ஸ்ரீ ஆஞ்சநேயர் விஜயம்
- தொழில் பார்வை

# உண்மையின் உரைகல்

மாமன்னர் அசோகர் நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு எதிரில் வந்து கொண்டிருந்த ஒரு வயோதிக புத்தபிக்ஷூ மன்னரும் அவரது ஆட்களும் செல்ல வழிவிட்டு, ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றார். அசோகச் சக்கரவர்த்தி அவரைப் பார்த்து விட்டார். உடனே தமது ரதத்தை நிறுத்திவிட்டு, இறங்கிச் சென்று புத்த பிக்ஷூயின் காலில் நெடுஞ்சாண கிடையாக விழுந்தார். அவரது சிரம் துறவியின் காலில் பட்டது. துறவி தமது கைகளை உயர்த்தி மன்னனை ஆசிர்வதித்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அமைச்சர் சங்கடப்பட்டார்.

“ஒரு மண்டலாதிபதி ஒரு பரதேசியின் காலில் விழுவதா? அரச பாரம்பாரியக் கவுரவம் என்னாவது?” என்ற எண்ணம் அவரை அலைக் கழித்தது. அரண்மனைக்கு சென்றதும் அரசரிடம் தமது வருத்தத்தை வெளிப்படுத்தினார். அமைச்சரின் பேச்சைக் கேட்ட அசோக மன்னர் சிரித்தார். அமைச்சரின் கேள்விக்குப் பதிலளிக்காமல், ஒரு விசித்திர கட்டளையைப் பிறப்பித்தார்.

“ஒரு ஆட்டுத் தலை, ஒரு புலித்தலை, ஒரு மனிதத்தலை, மூன்றும் எனக்கு உடனே வேண்டும். ஏற்பாடு செய்யுங்கள் அமைச்சரே,” என்றார். மன்னரின் கட்டளை அமைச்சரைத் திகைக்க வைத்தது. எனினும் அரச கட்டளையாயிற்றே! அதை நிறைவேற்ற ஏவலர்கள் நாலாபக்கமும் பறந்தனர். ஆட்டுத்தலை கிடைப்பதற்கு அதிகச் சிரமம் இருக்கவில்லை. ஓர் இறைச்சிக் கடையில் அது கிடைத்து விட்டது. புலித் தலைக்கு அலைந்தனர். அது ஒரு வேட்டைக்காரனிடம் கிடைத்தது. அன்றுதான் அவன் ஒரு புலியை வேட்டையாடியிருந்தான்.

மனிதத் தலைக்கு எங்கே போவது? கடைசியில் சுடுகாட்டிற்குச் சென்று ஒரு பிணத்தின் தலையை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தனர் மூன்றையும் பார்த்த அசோக மன்னர் தன் அமைச்சரிடம், “இம்மூன்றையும் சந்தையில் விற்றுப்பொருள் கொண்டு வாருங்கள்.” என்றார். மன்னரின் கட்டளைப்படி சந்தைக்குச் சென்றவன் திணறினான். ஆட்டுத் தலை அதிகச் சிரமமின்றி விலை போனது. புலியின் தலையை வாங்க ஆளில்லை. பலர் அதை வேடிக்கைத் தான் பார்த்தனர்.

கடைசியில் ஒரு வேட்டைப் பிரியரான பிரபு அதனை வாங்கித் தன் வீட்டில் அலங்காரமாக மாட்டி வைக்க எடுத்துப் போனான். மீதமிருந்த மனிதத் தலையைப் பார்த்த கூட்டம் அருவருப்புடன் அரண்டு மிரண்டு பின் வாங்கியது. ஒரு காசுக்கு கூட அதை வாங்க யாரும் முன்வரவில்லை. அரண்மனை திரும்பிய அமைச்சர் ஆட்டுத் தலை உடனே விலை போனதையும், புலித்தலை சற்றுச் சிரமத்துடன் விலை போனதையும் மனிதத் தலையை வாங்க ஆளில்லை என்பதையும் தெரிவித்தார். “அப்படியானால் அதை யாருக்காவது இலவசமாகக் கொடுத்து விடுங்கள்!” என்றார் அசோகர். இலவசமாகக் கூட அதனை வாங்கிக் கொள்ள யாருமே முன்வரவில்லை. இப்போது அசோக மன்னர் கூறினார்.

“பார்த்தீரா அமைச்சரே! மனிதனின் உயிர் போய்விட்டால், இந்த உடம்பு கால் காசு கூடப் பெறாது. இலவசமாகக் கூட இதனை யாரும் தொடமாட்டார்கள். இருந்தும் இந்த உடம்பு உயிர் உள்ள போது என்ன ஆட்டம் ஆடுகிறது! செத்த பின்பு நமக்கு மதிப்பில்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால், உடலில் உயிர் இருக்கும்போது, தம்மிடம் எதுவும் இல்லை என்று உணர்ந்தவர்கள் தான் ஞானிகள். அத்தகைய ஞானிகளை விழுந்து வணங்குவதில் என்ன தவறு? சொல்லப்போனால் அதுதான் ஞான வாயிலின் முதல் படி!” என்றார். தன் தவறை உணர்ந்தார் அமைச்சர்.

நீதி: பணிந்தவர்களும், துணிந்தவர்களும் வாழ்வில் தோற்றதாக சரித்திரம் இல்லை. இதுவே உண்மையின் உரைகல்.

**- ஆசிரியர்**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. **Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

**MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.**
**Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.**

குருவே துணை

# மக்கள் விசாரணையின்

## துணை ஆசிரியர்



## திரு வீர ஆறுமுகம் அவர்களின்

# இல்லத் திருமண விழா

**மணமகன்:** ஆறு. வீரப்பமூர்த்தி

**மணமகள்:** க.சத்தியஜோதி



**மணநாள் : 06-06-2019**

**அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை**
**அஃதும்பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.**

அறம் என்று சிறப்பித்து சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும். அதுவும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் விளங்கினால் மேலும் நன்மையாகும்.

புரிதலும் அறிதலும் ஒன்றாகி
அன்பும் காதலும் தினம் பெருகி
ஒருமித்த எண்ணத்தில் நறுமண வாழ்வாகி
உருவாகிடும் கவிதையே மழலையாகி!!!
நேசித்த இரு மனங்கள் திருமண விழாவில்
இணையும் இந்த நன்னாளினில், பொன்னாளினில்
இல்லறமெனும் இன்பச் சோலையிலே
இணைப் பறவைகளாய் மெல்லிசை பாடி
மணமன்றவில் கூடும் மணமக்களே!

நீவிர்
நல்லறம் பேணி நலமுடன் வாழ்வீர்!
சொல்லறம் பழகி சொர்க்கம் காண்பீர்!
மனையறம் துலங்கி மாண்புடன் மகிழ்வீர்!
பேறுகள் பல பெற்று பெயர் நிலைக்க வாழ்வீர்!
இன்ப துன்பத்தில் இரண்டெனக் கலந்து
ஒன்றென ஆவீர்!
அன்பு மிகுந்து அக்கறை நயந்து
பண்பில் கனிந்து பாசத்தில் இணைந்து
பாருலகம் வியந்து போற்றிப் புகழ்ந்திட
பல்லாண்டு வாழ்க! வாழ்கவே!





வாழ்த்துகளுடன்

முனைவர் **ஆ.மவுரியன்** B.A., M.A., Ph.D.(Hons).

**ஆசிரியர் - மக்கள் விசாரணை**

MAKKAL VISARANAI, Tamil Monthly. Regd. No. TN/CC(S)DN/461/19-21
Registered with Registrar of Newspaper for India Under No. TNTAM44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month


# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்









- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements and anything







No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33334, Ph : 044 - 4861 5321**